பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 04, வியாழக்கிழமை 20.07.2017 | கதிர் 256

## ஒதுங்கி நின்றார் கூட்டு எதிரணியின் எம்.பி. ஒருவர்

கூட்டு எதிரணியைச் சேர்ந்த பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெஷான் ரணசிங்க, கூட்டு எதிரணியின் அரசியற் செயற்பாடுகளில் இருந்து தாம் தற்காலிகமாக ஒதுங்கியிருக்கப் போகின்றார் என அறிவித்திருக்கின்றார்.

பக்கம் 18

★ தமிழ் மக்களின் அரசியல் பாதுகாப்பாகவே உள்ளது
★ கூட்டமைப்புத் தலைமை இன்னும் வலுவாக இருக்கலாம்

# ஒன்றுபட்டால் நிமிர்வோம்; பிளவுபட்டால் வீழ்வோம்!



## தெற்கு ஊடகத்துக்கு முதல்வர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

"தமிழ் மக்களின் எதிர்காலம் பாதுகாப்பாகவே உள்ளது. நாங்கள் ஒன்றுபட்டால் நிமிர்வோம். பிளவுபட்டால் வீழ்வோம் என்ற விழிப்புணர்வு எங்கள் மத்தியில் உள்ளது."

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அது இருக்க வேண்டிய வலிமை நிலையில் இல்லை என்பது உண்மைதான். எங்கள் பிரச்சினைகளை தமிழர்கள் அல்லாதவர்களுக்கு நாங்கள் சரியாக எடுத்துரைக்கவில்லை. அதில் தவறி வருகிறோம்."

- இவ்வாறு தெற்கு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கின்றார் முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன்.

பக்கம் 03

## காணி விடுவிப்பு நிகழ்வு கேப்பாபிலவில் பிசுபிசுப்பு!

மக்கள் கோரும் காணிகள் அவை அல்ல என்பதால்



கேப்பாபிலவில் இராணுவ முகாம் பிரதேசத்திலிருந்து 179 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அது மக்கள் விடுவிக்குமாறு கோரி, போராட்டம் நடத்திய காணி

பக்கம் 18

அளப்பு அருணாசலம்




## சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் யாழில் பல நிகழ்வுகளில் பங்கேற்பு

யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணன் யாழ். மருத்துவபீடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு விஜயம் மேற்கொண்டார்.

பக்கம் 18



## ஐ.நா.அறிக்கையாளர் சிறைக்குச் சென்று புலிகளைச் சந்திக்க அனுமதித்தவர் யார்?

அமைச்சரவையில் ஜனாதிபதி சீற்றத்துடன் கேள்வி

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை, ஐ.நா. விசேட அறிக்கையாளர் பென் எமர்ஸன் பார்வையிடுவதற்கு யார் அனுமதி வழங்கினார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம்

பக்கம் 18

## பெண்கள் மீது அத்துமீறுவோர் அடக்கப்படுவர்!

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் பெண்கள் மீது தவறாக நடக்க முற்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாகாண மகளிர்

பக்கம் 18

## கைதான கடற்படை அதிகாரியின் விளக்கமறியல் ஓக.2 வரை நீடிப்பு

முன்னைய ஆட்சிக் காலத்தில் - 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் - 11 இளைஞர்கள் காணாமற்போகச்செய்யப்பட்டமை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுவிளக்க

பக்கம் 18

## மற்றொரு காணி அபகரிப்புச் சதி முல்லைத்தீவில் அரங்கேறுகின்றது!



முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் தமிழ் மக்களின் மற்றொரு தொகுதிக் காணியை மகாவலி வலயத்துக்கு உட்பட்டது என்ற பெயரில்

பக்கம் 18

## அரசமைப்புப் பேரவையிலிருந்து வெளியேறியது விமலின் கட்சி!



விமல்வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அரசமைப்பு உருவாக்கப்பேரவையிலிருந்துவெளியேறுவதாக அறிவித்

பக்கம் 18

## வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் கைவிடப்பட்டது!



தங்களுக்கு நிரந்தர அரசாங்க வேலை வாய்ப்பை வழங்கவேண்டும் எனக் கோரி கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் யாழ். மாவட்ட செயலகத்திற்கு

பக்கம் 18

## வித்தியா படுகொலை துயர்மிக்கது; கவலை தெரிவிக்கிறார் ஜனாதிபதி

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலைச் சம்பவம் போன்ற - போதைப்பொருள்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தலுடன் இணைந்த - நிகழ்வுகள் துயர்மிக்கவை எனத் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பாணந்துறை

பக்கம் 18

## தண்டனைக் கைதியான பொலிஸ் அதிகாரி கைதிச் சீருடையின்றி மன்றில் பிரசன்னம்!

வித்தியா கொலை வழக்கின் சாட்சி குறித்து நீதிபதிகள் அதிருப்தி

(எஸ்.நிதர்ஷன்)

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கை விசாரணை செய்யும் 'ட்ரயல் அட்பார்' மன்றின் முன்னிலையில் சாட்சியமளிக்க வந்தவர் சிறைக் கைதியாக இருந்துகொண்டு குற்றவாளி சீருடை அணியாமல் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை மன்று வன்மையாகக் கண்டித்துள்ளது.

முன்னாள் சுன்னாகம் பொலிஸ் நிலையப்

பக்கம் 18

காலைக்கதிர் Kalaikkathir



# மைத்திரி, மஹிந்த இணைவதே அனைவரினதும் எதிர்பார்ப்பு!

## வனத்துறைக்கான பிரதி அமைச்சர் சுமேதா

கொழும்பு, ஜூலை 20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இணைத்துக் கொண்டு செயற்பட வேண்டும் என்று அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினரான, நிரந்தர அபிவிருத்தி மற்றும் வனத் துறைக்கான பிரதி அமைச்சர் சுமேதா ஜீ ஜயசேன வலியுறுத்தியுள்ளார்.

தேசிய அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பெரும்பாலான வர்களின் விருப்பமும் இது வாகவே உள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு பலமான நாடாக நாட்டை முன்னேற்றும் நோக்கிலேயே தேசிய அரசில் இணைந்து செயற்பட்டு வருகின்றேன். அதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசில் செயற்பட நாங்கள் தயாரில்லை.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டே தேசிய அரசில் இணைந்துகொண்டுள்ளோம். இதன் மூலம் அரசமைப்பில் தேர்தல் முறை மையிலும் மாற்றங்களை ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் இன்னமும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை அதிகமாக நேசிக்கிறார்கள். அவர் தொடர்பில் மரியாதை வைத்திருக்கிறார்கள்.

இதனால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவும் இணைந்து எதிர்காலத்தில் நாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசை ஏற்படுத்த வேண்டும்.- என்றார். (எ)



## முதலீட்டுச்சபை புதிய தலைவராக துமிந்த ரத்நாயக்க

இலங்கை முதலீட்டுச் சபை யின் புதிய தலைவராக துமிந்த ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். முத லீட்டுச் சபையின் தலை வராக இருந்த சட்டத்தரணி உபுல் ஜயசூரிய அண்மையில், பதவி விலகினார்.

அதையடுத்து, முதலீட்டுச் சபையின் புதிய தலைவராக துமிந்த ரத்நாயக்கவுக்கான நியமனத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கினார் எனச் சர்தேச வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலீட்டுச் சபையின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ள துமிந்த ரத்நாயக்க, முன்னதாக முதலீட்டுச் சபையின் பணிப்பாளர்களுள் ஒருவராகச் செயற்பட் டுள்ளார்.

## இளவாலையில் பொலிஸ் நடமாடும் சேவை

பண்டத்தரிப்பு, ஜூலை 20

பொலிஸ்மாஅதிபர் பூஜித ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய நாடு முழுவதும் உள்ள பொலிஸ் பிரிவுகளில் நடத்தப்படும் பொலிஸ் நடமாடும் சேவை இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மார்வு குழல் ஆலய கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 23ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஒரு மாத காலத்துக்கு நடைபெறும்.

இந்த நடமாடும் பொலிஸ் சேவை மூலம் காணாமற்போன காணி உறுதிகள், கடவுச்சீட்டு மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் போன்றவை தொடர்பாக முறைப்பாடு செய்து முறைப்பாட்டுப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆ.ஆனந்தராசா அறிவித்துள்ளார்.

## பண்டத்தரிப்பு முன்பள்ளி விளையாட்டு விழா

பண்டத்தரிப்பு, ஜூலை 20

மறுமலர்ச்சி மன்ற முன் பள்ளி மாணவர்களின்பாலர்விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியள வில் காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்ற மைதானத்தில் இடம்பெறும்.

மன்றத்தின் தலைவர் சு.சுந்தரி வத்தின் தலைமை யில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மறுமலர்ச்சி மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர் எஸ்.நகுலேஸ்வரனும் கௌரவ விருந்தினராக மன்ற மூத்த உறுப்பினர் எஸ்.ஜெகதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக மன்ற நலன் விரும்பியான இ.அற்புதராசா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ)

## ஐ.நா.செயலர்- ரவி கருணாநாயக்க சந்திப்பு



கொழும்பு, ஜூலை 20

அரசியல் விவகாரங்களுக் கான ஐ.நாவின் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணா நாயக்க ஆகியோருக்கு இடையில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## வெங்காய அறுவடை மும்முரம்; மகிழ்ச்சியில் யாழ்.விவசாயிகள்!

வலிகாமம் பிரதேசத்தில் சிறுபோக வெங்காய அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இம்முறை, வெங்காய விளைச்சல் அமோகமாகவுள்ளது எனவும் விவசாயிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், வலிகாமத்தில் ஏழாலை, குப்பிளான், குரும்பசிட்டி, வயாவிளான், ஈவினை, புன்னாலைக்கட்டுவன், மயிலங்காடு, சூராவத்தை, சுன்னாகம், மருதனார்மடம், இணுவில், உடுவில், தெல்லிப்பழை, கட்டுவன், அளவெட்டி, மல்லாகம், ஊரெழு, உரும்பிராய், நீர்வேலி, இருபாலை, கோப்பாய், கோண்டாவில், புத்தூர், நவக்கிரி, சிறுப்பிட்டி உள்ளிட்ட பகுதிகளில் வெங்காய அறுவடை தற்போது இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடம் சிறுபோக வெங்காயச் செய்கையில் வலிகாமத்தில் பெரும்பாலான விவசாயிகள் ஆர்வம் காட்டியிருந்த போதும், வெங்காய விலையும் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது.



இதன்படி, ஒரு கிலோ வெங்காயம் தற்போது 180 ரூபா முதல் 200 ரூபா வரை தங்களிடமிருந்து வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகின்றது என விவசாயிகள் கூறியுள்ளனர்.

யாழ். குடாநாட்டிலிருந்து பெருமளவு வெங்காயம் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றமையே விலை உயர்வுக்குக் காரணம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வருடம் சிறு போகத்தின் போது வெங்காயம் 70 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதையும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

## வவுனியாவில் நடைபெற்ற சுவாமி விபுலாநந்தரின் 70 ஆவது நினைவு தின நிகழ்வு

சுவாமி விபுலாநந்தரின் 70 ஆவது நினைவு தின நிகழ்வு வவுனியா தமிழ் மாமன்றத்தின் ஏற்பாட்டில் வவுனியா ஏ-9 வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு சந்தியில் உள்ள அவரின் திருவுருவச் சிலையின் முன்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விபுலாநந்தரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வும், சுவாமி விபுலானந்தரை பற்றிய சொற்பொழிவும் இடம்பெற்றன.

வவுனியா நகரசபையின் அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா நகர முன்னாள் உபநகரபிதா சந்திரகுலசிங்கம், தமிழ்மணி அகளங்கன், மருத்துவர் மதுரகன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (எ-100)






# 150 ஆவது நாளைக் கடந்தது கிளிநொச்சி போராட்டம்






காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் நடத்தி வரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 150ஆவது நாளையும் கடந்தது....

# கொழும்பில் ஒரே மேடையில் விக்னேஸ்வரன், சுமந்திரன்!





கொழும்பு, ஜூலை 20

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியும் பேச்சாளருமான கலாநிதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 22ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் ஒரு நிகழ்வில் ஒரே மேடையில் சந்திக்கின்றனர்.

கொழும்பு சட்டக்கல்லூரியின் தமிழ் மாணவர் மன்றக் கலைவிழா நிகழ்வே அது.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதல்வர்நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் பங்கு பற்றுகின்றார்.

அண்மையில் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமனம் பெற்ற மூன்று தமிழ்ப் பேசும் சட்ட நிபுணர்கள் அந்த நிகழ்வின் மேடையில் பாராட்டி கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், வி.புவிதரன், நிஸாம்காரியப்பர் ஆகியோரே அந்த மூவருமாவார்.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும்நீதியரசர்விக்னேஸ்வரன் புதிய ஜனாதிபதி சட்டத் தரணிகளுக்குபொன்னாடைபோர்த்தி கௌரவிக்கும்படி அழைக்கப்பட்டால், சுமந்திரனுக்கும் அவர் பொன்னாடை போர்த்துப் பாராட்ட வேண்டியிருக்கும்.

என்னதான் உள்கட்சி அரசியலில் மோதிக் கொண்டாலும் அவர்கள் இருவரும் நேரில் பழகுவதில் இங்கிதமும் நாகரிகமும் தெரிந்தவர்கள். தனது சட்ட மாணவனாக ஒரு காலத்தில் இருந்த சுமந்திரனை பொன்னாடைபோர்த்திக்கௌரவிப்பதில் முதல்வர் முன்னிற்பார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். (உ)

# சீனிக் கொள்கலனில் 160 கிலோ கொக்கெயின்

## இரத்மலானையில் கண்டுபிடிப்பு





கொழும்பு, ஜூலை 20

பாரிய கொள்கலனில்கொண்டுவரப்பட்ட சீனி மூடைகளுக்கு நடுவே 160 கிலோ கொக்கெயின் கடத்திக் கொண்டுவரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இரத்மலானையிலுள்ளபொருளாதார மத்திய நிலையத்தின் சதொச களஞ்சியசாலைக்குகொண்டுசெல்லப்பட்டுக்கொண்டிருந்த கொள்கலனில்இருந்தே இந்தக் கொக்கெய்ன் போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கல்கிசைப் பொலிஸாரினால் நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இவை மீட்கப்பட்டன.

கொக்கெய்ன் போதைப் பொருள் அடங்கிய 10 பொதிகள் கண்டெடுக்கப்பட்டன எனவும் ஒரு பொதியில் சுமார் 16 கிலோகிராம் அளவு கொக்கெய்ன் போதைப் பொருள் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கல்கிசைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# புத்தரின் உருவம் பொறித்த சட்டையை அணிந்ததால் சிக்கல்

இலங்கைக்குச் சுற்றுலா வந்த இந்திய யுவதி ஒருவரின் ஆடையில் புத்தரின் உருவம் பொறிக்கப்பட்டிருந்ததால் பொலிஸாரால் அவர் தடுத்து வைக்கப்பட்டார். 26 வயதுடைய இந்த யுவதி கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டார் என 'த ஹிந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னிப்பு கோரும் வாக்கு மூலத்தில் கையொப்பமிட்ட பின்னர் அந்த யுவதி விடுக்கப்பட்டுள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பியான சிறீதரன் பிரதேச வாத சொல்லாடல்களை பயன்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டி அதைக் கண்டிக்கும் விதத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னாள் யாழ்.மாவட்ட எம்.பி. மு.சந்திரகுமார் நேற்று கிளிநொச்சியில் ஏற்பாடு செய்திருந்தார். அதில் கலந்து கொண்டோரைக் காணலாம்.

# சு.க. நிகழ்வில் பங்குபற்றுவதற்கு மஹிந்தவுக்கு விசேட அழைப்பு

கொழும்பு, ஜூலை 20

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி நடைபெறவிருக்கும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு விசேட அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

கொழும்பு கெம்பல் மைதானத்தில் இந்த நிகழ்வு நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு விசேட அழைப்பிதழ்கள் அனுப்பி வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (உ)

# ஓகஸ்ட் 3 முதல் ஒரு மாதத்துக்கு உயர்தர வகுப்புகள் நடத்தத் தடை

கொழும்பு, ஜூலை 20

எதிர்வரும் ஓகஸ்ட் 02ஆம் திகதி நள்ளிரவு முதல் செப்டம்பர் 02ஆம் திகதி வரையான காலத்தில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள், கருத்தரங்குகள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாதிரி வினாத் தாள்களை அச்சிடல், அவற்றை விநியோகித்தல், மாதிரி வினாத் தாள்களை வழங்குவதாக பதாகைகள் ஒட்டுவது, துண்டுப்பிசுரங்களை விநியோகித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறி வகுப்புகளை நடத்துபவர்கள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தின் 1911 என்ற இலக்கத்துக்கோ அல்லது அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்துடனோ தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு அவர் கோரியுள்ளார். (உ)

# ஒன்றுபட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பேட்டியில் முதல்வர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கேள்வி:- வடமாகாண சபையில் உங்களுடன் சம்பந்தப்பட்டு அண்மையில் இடம்பெற்ற நெருக்கடிகளின் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் எதிர்காலம் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்:- தமிழர்களின் அரசியல் எதிர்காலம் பாதுகாப்பாக உள்ளது. ஐக்கியப்பட்டால் எழுவோம், பிளவுபட்டால் வீழ்வோம் என்ற விழிப்புணர்வு (நம்மத்தியில்) உள்ளது.

கேள்வி:- தமிழ் மக்களுக்கு ஒரு புதிய (அரசியல்) தலைமை வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறியுள்ளார். மக்கள் உங்களைத் தலைவராக வரவேண்டும் என விரும்புகின்றார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். உங்கள் பதில் என்ன?

பதில்:- எங்கள் அரசியல் பிரச்சினைகள் குறித்து அதிக விழிப்புணர்வும், அதைத் தீர்ப்பதற்கு புரிந்துணர்வுடன் கூடிய ஐக்கியப்பட்ட முயற்சிகளுமே தேவைப்படுகின்றன. எங்கள் தலைமைத்துவம் தனது குறைபாடுகளைப் புரிந்து கொண்டு, மக்களுக்கு நாங்கள் அளித்த உறுதிமொழிகளை அடைவதற்கு எங்கள் அனைவரது பங்களிப்பையும் ஒன்றிணைத்து முன்நகர்த்த வேண்டும். இது எங்கள் ஒவ்வொருவரிலுமே தங்கியிருக்கின்றது.

கேள்வி:- தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் விடயத்தில் நாடாளுமன்றத்தில் தற்போதைய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமையை நீங்கள் என்ன வகையில் நோக்குகின்றீர்கள்?

பதில் :- அது இருக்க வேண்டிய வலுவுடன் இல்லை. எங்களின் அடிப்படை பிரச்சினைகள் தமிழர் அல்லாத உறுப்பினர்களுக்கு சரிவர விளக்கப்படவேயில்லை. அதிக எண்ணிகையில் தமிழர்கள் அல்லாத சபையில் (நாடாளுமன்றத்தில்) எங்கள் உறுப்பினர்கள் தமிழில் பேசுவது பிரயோசனமற்றது. அவர்கள் மொழிபெயர்ப்பைக் கேட்பதே இல்லை. பலருக்கும் ஆங்கிலம் புரியவதில்லை.

வடக்குக்கும், தெற்கிற்கும் ஒருவர் மற்றவரின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு சிலாகிக்க முடியாத பெரும் இடைவெளி உள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏதாவது செய்தாக வேண்டும்.

எங்கள் தேசியப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு பிரதான இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு அவசியம். அதுதான் இப்போது தேவைப் படுகின்றது.

கேள்வி:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய தலைமைத்துவத்தினால்தான் முதலமைச்சர் வேட்பாளராக நீங்கள் நிறுத்தப்பட்டீர்கள். அது தொடர்பில் இப்போது என்ன உணருகின்றீர்கள்!

பதில்:- நான் இன்னும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தான் இருக்கிறேன். அதில் என்ன குழப்பம்...?

கேள்வி:-அரசியலில் ஈடுபட உங்களைத் தூண்டியது எது?

பதில்:- எந்தத் தூண்டுதலும் இல்லை. பல்வேறு தமிழ்க் குழுக்களினாலும் தமிழ்த் தலைவர்களினதும் இடைவிடாத குண்டு வீச்சு அழுத்ததால் அது நேர்ந்தது. ஏறத்தாழ ஆறு மாதங்கள் நான் விலத்தி நின்று பிடித்துப் பார்த்தேன். கடைசியாக எல்லோரும் உடன்பட்டால் நான் வருவது குறித்துப் பரிசீலிக்கலாம் என்றேன். அவர்கள் ஒன்று பட மாட்டார்கள் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவர்களோ ஒன்றுபட் டார்கள். அதுதான் உண்மையில் நடந்தது. - என்றார் முதல்வர்.

இந்தப் பேட்டியில் அதிகாரப் பகிர்வு முறைமைகள், தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, வடக்கு - கிழக்கு இணைப்பு, இணந்த வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களின் உரிமைகள் போன்றவை குறித் தெல்லாம் விலாவாரியாக - விவரமாக - முதலமைச்சர் தமது கருத்தை வெளிப்படையாகப் பகிர்ந்துள்ளார். (உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சேர்ந்து பயணிப்பதே ஒரே வழி

*"இந்த நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு - நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனச்சிக்கலுக்கு - தீர்வுகாண வேண்டுமானால், நாட்டின் இரு பெரும் தேசியக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தங்களது பிரச்சினைகளை ஒரு பக்கம் தூக்கி வைத்துவிட்டு ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். இல்லாவிடின் ஒருபோதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது."*

- இவ்வாறு தம்மைச் சந்தித்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணனிடம் எடுத்துரைத்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

இரண்டு கட்சிகளுமே சேர்ந்து பணியாற்றும் ஓர் அருமையான சந்தர்ப்பம் - வரலாற்று வாய்ப்பு - கிட்டியிருக்கின்றது. அவை, அதை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தவிரவும், இந்த விடயத்தில் வரலாற்றுக் கடப்பாட்டுக்கு அப்பால் சந்தர்ப்ப நெருக்குதலும் அவர்களை ஒன்றுபட்டு செயற்பட வைத்திருக்கின்றது என்பதும் உண்மைதான்.

தென்னிலங்கையின் பெரும்பான்மைத் தரப்புக்கு மத்தியிலேயே - இரண்டு பெரும் கட்சிகளுக்கும் இடையில் - மூன்றாவது பெரும் சக்தியாக கூட்டு எதிரணி - முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் உருவெடுத்திருக்கின்றது. அது வேகமாக வளர்ந்து தென்னிலங்கை மக்களின் ஆதரவையும் கணிசமாகப் பெற்றும் வருகின்றது.

பிரதான இரு கட்சிகளான ஐ.தே.கட்சி, சு.க. ஆகியவற்றின் இரு தலைமைகளுமே இந்தப் பொது எதிரியான கூட்டு எதிரணியை எதிர்கொள்வதாயின், தமக்குள் ஒன்றுபட்டுச் செயற்பட்டேயாக வேண்டும் என்ற இக்கட்டு. அதுதான் யதார்த்தக் களச் சூழல்.

பொது எதிரணியை வளரவிட்டால் அரசில் ஐ.தே.கட்சி நீடிக்க முடியாது. அதேசமயம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையையும் கூட அது கபளீகரம் செய்துவிடும்.

ஆகவே, நாட்டின் அரசியல் களப்புறச் சூழல் இரண்டு பிரதான கட்சிகளையும் பிரிந்து நின்று செயற்படமுடியாத இக்கட்டில் சிக்க வைத்து, அவற்றைக் கட்டி வைத்திருக்கின்றது.

ஆனால், இந்தக் கட்டை - இக்கட்டை - வாய்ப்பாகப் பயன்படுத்தி, இதுவரை நாட்டைச் சீரழித்து வந்த தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஒரு தீர்வைக் காண்பதை விடுத்து, அந்தக் கட்சிகள் தத்தமது சுயகட்சி நலனைப் பேணுவது குறித்தே சிந்திக்கின்றன. அந்தப் போக்கிலேயே அவற்றின் செல்நெறி அமைந்திருக்கின்றது.

அந்த இரு கட்சிகளுக்கும் ஒரு விடயம் பொதுவானது. நாடாளுமன்றை நேரத்துடன் கலைத்து விட்டு, பொதுத் தேர்தலுக்குச் செல்ல இந்த இரண்டு பிரதான கட்சிகளும் தயாரில்லை. பொதுத் தேர்தலுக்குச் சென்றால், இனவாதப் பேயைக் கையில் பிடித்துக் கொண்டு இராட்சதன் போலக் காத்திருக்கும் கூட்டு எதிரணி இக்கட்சிகளை விழுங்கி ஆட்சி அமைத்துவிடும் பேராபத்து உள்ளது. உள்ளூராட்சித் தேர்தலையே நடத்த முடியாது இழுத்தடிக்கும் இவர்கள் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் போவார்கள் என்பது துர்லபமே.

இணைந்தும் ஆட்சி நடத்த முடியாது, நாடாளுமன்றையும் முற்கூட்டியே கலைக்க முடியாது என்றால், இந்த இரண்டு பிரதான கட்சிகளுமே தனித்து ஆட்சியைப் பிடிக்க வழி தேடுவதுதான் அவற்றுக்குள்ள ஒரே - எஞ்சிய - மார்க்கமாக இருக்க முடியும்.

அப்படி ஒரு நிலைமை வந்தால், அப்போது நிபந்தனை விதிக்கும் தரப்பாக இருக்கப்போவது இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய சிறுபான்மையினரின் கட்சிகளும் தான்.

இப்போதுள்ள நாடாளுமன்ற ஆசனங்கள் பற்றிய அட்சர கணிதக் கணக்குகளின்படி பார்த்தால், இரண்டு பிரதான கட்சிகளுக்குமே நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது. அதைப் பெறுவதாயின் அடுத்த அதிக எண்ணிக்கையான ஆசனங்களை வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸில் அவை தங்க வேண்டும்.

அதாவது, இந்தப் பிரதான கட்சிகளில் ஒன்று தனி ஆட்சி நடத்துவதாயின், நிச்சயமாக சிறுபான்மையினரின் கட்சிகளின் ஆதரவு அந்தக் கட்சிக்குக் கட்டாயம் தேவை.

குறிப்பாக, தமிழ்க் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவற்றின் உதவியை அவை நாட வேண்டியிருக்கும்.

அப்படி ஒரு நிலை வந்தால் கூட, சிறுபான்மை மக்களின் கட்சிகள், 'குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாக' இரண்டு பிரதான கட்சிகளிடமிருந்தும் பிடுங்கிக்கொள்ளவும் வாய்ப்புண்டு.

அத்தகைய நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதாயின் சேர்ந்து பயணிப்பதே இரு பிரதான கட்சிகளுக்கும் உள்ள நல்ல மார்க்கமாகும்.

அதன் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்கும் தீர்வு காண வாய்ப்புக் கிடைக்கும்.

# நாட்டில் 40 வீத இளையோர் தேர்தலில் வாக்களிப்பதில்லை

## ஆய்வில் தெரிய வந்துள்ளது என்கிறார் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஜூலை 20

நாட்டில் 40 சதவீதமான இளைஞர், யுவதிகள் தேர்தல்களில் வாக்களிப்பதில்லை என்று ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது என பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகள் நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐவொய்ஸ் டொட் எல்கே என்ற சமூக ஊடக வலைத் தளம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்விலேயே பிரதிஅமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிறந்த இளைஞர் சந்ததியை உருவாக்குவதற்காக சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டின் இளைஞர், யுவதிகள் சமூக வலைத் தளங்கள் ஊடாகப் பல்வேறு பிரச்சினைகள் விடயத்தில் ஆர்வம் காட்டுகின்ற போதிலும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் அந்தளவுக்கு ஆர்வம் காட்டுவதில்லை. நாட்டில் 40 சதவீதமான இளைஞர், யுவதிகள் வாக்களிப்பதில்லை என்று ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. இது ஜனநாயகத்துக்கு உகந்த விடயமல்ல. அவர்கள் பிரதான ஊடகங்களையும் விட சமூக ஊடகங்களில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

இளைஞர், யுவதிகளைச் சிறந்த குணநலன் மிக்கவர்களாக உருவாக்குவதற்கு சமூக ஊடக செயற்பாட்டாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார். (எ)

# வடக்கு போக்குவரத்து அமைச்சர் மாற்றத்தைத் தாமதப்படுத்துங்கள்!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் ரெலோவுக்கு கடிதம்

வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் மீது தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) எடுத்துள்ள நடவடிக்கைகளைப் போக்குவரத்துத் துறையின் நலன் கருதி நிறுத்தியோ அல்லது தாமதப்படுத்தியோ ஒத்துழைப்பு வழங்குமாறு வட மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் ரெலோவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பான கடிதத்தைக் கட்சியின் தலைமையிடம் ஒப்படைக்கும் விதமாக கட்சி பிரமுகர் ஒருவரிடம் அந்தச் சங்கம் ஒப்படைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வட மாகாண போக்குவரத்து அமைச்சின் ஊடாக வட மாகாணத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்திருகின்றன. அவை தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் புதிய பஸ் நிலையத்தைத் திறப்பது தொடர்பான செயற்பாடு முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், ஏனைய மாவட்டங்களில் போக்குவரத்து விதிமுறைகளில் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏதுவான காலச்சூழலும் ஏற்பட்டு வருகின்றது.

இந்தநிலையில், நாம் வட மாகாண போக்குவரத்து துறையை சார்ந்தவர்கள் என்ற வகையில் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொடர்பில் மகிழ்ச்சியான தருணங்களை எதிர்பார்த்து இருப்பதுடன் எமது தொழிலாளர்கள் மற்றும் பஸ் உரிமையாளர்களின் வாழ்வாதாரத்திலும் முன்னேற்றம் ஏற்படும் என்ற அவாவில் உள்ளோம்.

இந்தநிலையில், வடக்கில் ஏற்பட்டு வரும் அரசியல் சூழ்நிலைகள் எமது எதிர்பார்ப்புகளில் ஏமாற்றத்தை கொண்டு வந்து விடுமோ என்ற அங்கலாய்ப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் புதிய பஸ் நிலையத்தை 95 லட்சம் ரூபா செலவில் அமைத்து பல மாதங்களாகச் செயற்படாது உள்ளது. இந்தநிலையில் தற்போது வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் அதனைத் திறப்பதற்கான ஆக்க பூர்வமான திட்டங்களை முன்னெடுத்துள்ளார்.

இவ்வாறான திட்டங்கள் கைகூடி வரும் நிலையில் தங்களது கட்சி அமைச்சர் பா. டெனீஸ்வரனை நீக்குமாறு கோரி வட மாகாண முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக அறிகின்றோம்.


எமது போக்குவரத்துத் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று இலங்கையில் எந்த மாகாணத்திலும் இல்லாதவகையில் போக்குவரத்து துறைக்கு நியதிச் சட்டத்தை உருவாக்கி 60:40 என்ற நேரசூசிஅட்டவணையை அறிமுகம் செய்து, அதனை வர்த்தமானியில் பிரசுரித்து சட்டமாக்கிய பெருமை அமைச்சர் டெனீஸ்வரனையே சாரந்துள்ளது. இவை மாத்திரமின்றி வட மாகாணத்தில் புதிய செயற்றிட்டங்களை அமைச்சர் தனது அமைச்சினூடாக முன்வைத்துள்ளநிலையில் தாங்கள் மேற்கொண்டுள்ள இச் செயற்பாடு ஏமாற்றமளிப்பதாகவும் விசனம் கொள்ளவும் செய்துள்ளது.

தங்கள் கட்சியால் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள் அமைச்சர் டெனீஸ்வரன் மேற்கொண்டுள்ள அமைச்சினூடான திட்டங்களை இடைநடுவில் நிறுத்துவதற்கோ அல்லது தாமதமாவதற்கோ தங்களது கட்சியின் செயற்பாடு அமைந்துவிடுமோ என்ற சந்தேகம் வலுவாக எங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இச்சூழலில், போக்குவரத்துத்துறையை சார்ந்தவர்களதும் வட மாகாண போக்குவரத்து துறையினதும் வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு அமைச்சர் டெனீஸ்வரன் மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கையை நிறுத்தியோ அல்லது தாமதப்படுத்தியோ மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.-என்றுள்ளது.

### சிறுநீரக நோயைத் தடுத்திட

- வளர்ந்தோர், தினசரி 3L வரை சுத்தமான நீர் அருந்துவோம்.
- அலுவலகத்துக்கு,பாடசாலைக்குச் செல்லும் போது குடிதண்ணீரை வீட்டிலிருந்து கொண்டு செல்வோம்.
- விவசாய இரசாயனப்பாவனையைகுறைப்போம்.
- சேதன விவசாய செய்கையில் ஈடுபடுவோம்.
- வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவோம்.



3 வருடங்களுக்கு ஒரு தடவையாவது சிறுநீர், இரத்த பரிசோதனை செய்திடுவோம்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

21.07.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : மிருகசீரிடம் பி.ப 2.25 வரை
திதி : திரயோதசி மு.இ 9.08 வரை

சுபநேரம் : 6.01 – 7.31 வரை
இராகுகாலம் : 10.31 – 12.01 வரை

காலைக்கதிர்
Kalaikkathir



# ஞானசார தேரரின் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல!

## மேலதிக நீதிவான் சாட்சியம்



கொழும்பு, ஜூலை 20

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண. ஞானசார தேரரின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல என கொழும்பு மேலதிக நீதிவான் ரங்க திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் ஹோமாகம நீதிமன்றில் குழப்பம் விளைவித்த சம்பவம் குறித்து நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணைகளில் சாட்சியமளித்த நீதிவான் ரங்க திஸாநாயக்க தெரிவித்தவை வருமாறு:-

நீதிமன்றுக்குள் செல்லிடப் பேசி ஒலித்தாலோ, கொட்டாவி விட்டாலோ விளக்க மறியலில் வைப்பதற்கு அதிகாரம் உண்டு.

இவ்வாறான ஒரு பின்னணியில் ஞானசார தேரரின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல.

ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பிலான சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட போது ஹோமாகம நீதிமன்றில், ஞானசார தேரர் கலகத்தில் ஈடுபட்டார்.


நீதிமன்றின் மீது கட்டளையிடும் தொனியில் கருத்துக்களை வெளியிட்டார்.

ஏற்கனவே, திட்டமிட்ட வகையில் ஞானசார தேரர் இவ்வாறு நடந்து கொண்டமை தெளிவாகியது.


நீதிமன்றில் கலகத்தில் ஈடுபட்டமை ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல என மேலதிக நீதிவான் சாட்சியமளித்துள்ளார். (க)

# இரணைமடுவில் சட்டவிரோத மீன்பிடி; எதிர்காலத்தில் தொழிலுக்குப் பாதகம்!

## கவலை தெரிவிக்கின்றனர் மீனவர்கள்









கிளிநொச்சி, ஜூலை 20

கிளிநொச்சி - இரணைமடு குளத்தில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தி சில மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், சிறிய மீன்களும் பிடிக்கப்பட்டு வருகின்றன என்றும் எதிர்காலத்தில் மீன்பிடிக்குசவால்விடும்வகையில் அவர்களின் செயற்பாடுகள் உள்ளன எனவும் மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இங்கு 150 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர் என வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குளத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ள நிலையில் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இந்த மீன்பிடி முறை தடை செய்யப்படவில்லை என்றும் கூறியுள்ளனர்.

மேலும், சம்பந்தப்பட்டவர்கள் தலையீடு செய்து இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள்; நாடாளுமன்றில் விவரங்கள் இல்லையாம்!

## நாடாளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் நாயகம் தகவல்

கொழும்பு, ஜூலை 20

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் பற்றிய விவரங்கள் நாடாளுமன்றில் கிடையா என நாடாளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் நாயகம் நீல் இத்தாவெல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் நாடாளுமன்றுக்குத் தெரிவாகும் உறுப்பினர் ஒருவரின் கல்வித் தகைமைகள் எவை எனக் கோரும் அதிகாரம் நாடாளுமன்றுக்குக் கிடையாது.

எந்தவொரு நபரும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகக்கூடிய குறைந்தபட்ச தகுதிகள் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பூட்டான் போன்ற நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்கபட்டக் கற்கை நெறியொன்றை பூர்த்தி செய்திருக்க வேண்டியது அடிப்படை தகுதிகளில் ஒன்றாகும்.

மேலும், 60 - 65 வயதின் பின்னர் மக்கள் பிரதிநிதிகளாக சேவையாற்ற அனுமதிக்குமாறு மக்களிடம் வாக்குக் கோரும் சந்தர்ப்பம் அந்நாட்டு மக்கள் பிரதிநிதிகளுக்குக் கிடையாது.

எவ்வாறெனினும், இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் களின் விவரங்களை திரட்டும் பணிகள் ஓரளவிற்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி நீதிவானின் நடவடிக்கை பாராட்டுக்குரியது - அமரகீர்த்தி தேரர்!

கொழும்பு, ஜூலை 20

சாவகச்சேரி நீதிவானின் நடவடிக்கை பாராட்டுக்குரியது என தேசிய புத்திஜீவிகள் சங்க சபையின் ஆலோசகர் கொட்டபொல அமரகீர்த்தி தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணமாவட்டத்தில் காணப்படும் ஒரே விஹாரையான நாவற்குழி சமுர்த்தி சுமண விஹாரையின் தாது கோபுரத்தை நிர்மாணிப்பது தொடர்பான சர்ச்சையின் போது, சாவகச்சேரி நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை.

அரசமைப்பின் 9 ஆம் சரத்தின் அடிப்படையில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதனால் தாது கோபுரத்தைநிர்மாணிக்க அனுமதியளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தமிழ் இந்து மதத்தைச் சேர்ந்த நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனின் நடவடிக்கை பாராட்டுக்குரியது என அமரகீர்த்தி தேரர் தெரிவித்துள்ளார்.

# கடலோரப் பாதுகாப்புப் படை பணிப்பாளரை சந்தித்தார் பாதுகாப்புச் செயலாளர்!

கடலோர பாதுகாப்பு படை பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் சமந்த விஜேதுங்கவை, பாதுகாப்புச் செயலாளர் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இந்தச்சந்திப்பில்கடலோரப் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பாதுகாப்புச்செயலாளர் ஆகியோருக்கிடையே இருதரப்பு முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்



துரையாடப்பட்டுள்ளன.

அத்துடன்,இந்தச்சந்திப்பை நினைவு கூரும் வகையில் இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன என பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

# கண்டாவளையில் மீள்குடியேறிய 2,703 குடும்பங்களுக்கு வீடுகள் தேவை!

கிளிநெச்சி, ஜூலை 20

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியேறியுள்ள சுமார் 2703 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை காணப்படுகிறது என கண்டாவளை பிரதேச செயலர் ரீ.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 8 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 969 பேர் வரையில் இதுவரை மீள்குடியேறியுள்ளனர்.

கண்டாவளைப் பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள 8 ஆயிரத்து 314 குடும்பங்களில் இதுவரை 5,278 குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 8 ஆயிரத்து 703 புதிய வீடுகளையும் பகுதியளவில் சேதமடைந்த 333 வீடுகளையும் புனரமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை காணப்படுகிறது எனவும் கண்டாவளைப் பிரதேச செயலர் ரீ.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



## ஆலையடிவேம்பில் பொலிஸ் நடமாடும் சேவை

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேசத்தில், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொலிஸ் நடமாடும் சேவை, இன்று முதல் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரை ஒரு மாத காலத்துக்கு நடைபெறவுள்ளது என அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ஜெமீல் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இந்நடமாடும்சேவையை, அம்பாறை மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மாஅதிபர்நுவன் வெதசிங்க மற்றும் மாவட்டத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் சாமந்த விஜேசேகர ஆகியோர் கலந்துகொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கில் சிறுபான்மையினர் மீது மட்டுமே பாய்கின்றன தடை செய்த சில சட்டங்கள்!

கிழக்கு மாகாணத்தில், சட்டத்தை இரு சாராருக்கும் ஒரேமாதிரியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கோரியுள்ள கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர். எம்.அன்வர், தடை செய்யப் பட்ட சில சட்டங்கள் சிறுபான்மையினர் மீது மட்டுமேபாய்கின்றன என்று சுட்டிக் காட்டினார்.

கிழக்கு மாகாணசபையின் 80 ஆவது அமர்வு தவிசாளர் சந்திரதாஸ கலபதி தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதன்போது உறுப்பினர் டீ. மெத்தானந்த சில்வாவின் தனி நபர் பிரேரணையான அம்பாறையில் சிங்கள மீன்பிடி பரிசோதகரை நியமிக்க வேண்டும் என்ற பிரேரணை சமர்ப்பிக்கப் பட்டது. அந்தப் பிரேரணை மீதான விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலை கந்தளாய்க் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் சிறு பான்மை இன மக்கள், வீச்சுவலையை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், இதே தொழிலை பெரும்பான்மை இன மக்கள், அதிகாரிகளை தம் வசம் வைத்துக் கொண்டு செயற்படுத்துகின்றனர். இது, இன ரீதியான பாரபட்சமாகும்.



## கிழக்கு சபை அமர்வில் அன்வர் சுட்டிக்காட்டு

இவ்விடயம் தொடர்பாக மாகாண விவசாய மீன்பிடி அமைச்சர் பரிசோதகர்களை அழைத்து விசாரித்து தீர்வு காணவேண்டும். இவ்வாறு தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட மீன் பிடி முறைகளைப் பயன்படுத்தும் போது அந்தச்சட்டம் சிறுபான்மையினர் மீது மட்டும் பாய்கிறது. -என்றார். (எ)

# மட்டக்களப்பில் நேற்று சிறப்பாக நடைபெற்ற சுவாமி விபுலாநந்தரின் சிரார்த்த தின நிகழ்வு



சுவாமி விபுலாநந்தரின் 70 ஆவது சிரார்த்த தினமும் மட்டக்களப்பு சிவானந்தா தேசியபாடசாலையின் ஸ்தாபகர் தினவிழாவும் நேற்று சிறப்பாக நடைபெற்றன.

கல்லடி உப்போடையில் உள்ள சுவாமி விபுலாநந்தரின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமான இந்த நிகழ்வில் சுவாமி விபுலாநந்தரின் உருவப் படம் பாடசாலை மாணவர்களால் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

சுவாமி விபுலாநந்தரின் நினைவு தினத்தில் பாடசாலையின் ஸ்தாபகர் தினமாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையான மட்டக்களப்பு சிவானந்தா தேசியபாடசாலை ஆண்டு தோறும் கொண்டாடுவது வழக்கம்.

அந்தவகையில் சுவாமியின் 70 ஆவது சிரார்த்த தினத்தில் ஸ்தாபகர் தின விழா சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழாக் குழுத் தலைவரும் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு மட்டக்களப்பு கல்லடி இராம கிருஷ்ண மிஷன் பொறுப்பாளர் சுவாமி பிரபு பிரேமானந்தா, மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையின் அதிபர் தயாபரன், பாடசாலை அபிவிருத்திக் குழுத் தலைவர் எந்திரி மங்களேஸ்வரன் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

# பரீட்சை எழுத விதிக்கப்பட்ட தடையைக் கண்டித்து வெளியேறினர் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்

தென்கிழக்குப் பல்கலைக் கழக வர்த்தக முகாமைத்துவ பீட மாணவர்களுக்கு பரீட்சை எழுது வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையைக் கண்டித்தும் அனைத்து மாணவர்களையும் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்குமாறு கோரியும், வர்த்தக முகாமைத்துவ மாணவர்கள், நேற்றுமுன்தினம் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறினர்.

பல்கலைக்கழகத்தில் தற்போது பரீட்சைகள் நடைபெற்று வருகின்ற நிலையில், வர்த்தகமுகாமைத்துவபீடத்தைச் சேர்ந்த சில மாணவர்களுக்கு, பரீட்சை எழுதுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதில் சகல மாணவர்களையும் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்குமாறும், வகுப்புத் தடை செய்யப்பட்டுள்ள மாணவர்களையும் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்குமாறும் தாம் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தோம் என மாணவர்கள் தெரிவித்தனர்.

80 சதவீதமான வரவை 50 சதவீதமாகக் குறைத்து, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல மாணவர்களுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும், அந்தக் கோரிக்கையை, பல்கலைக்கழக நிர்வாகம் நிராகரித்ததை அடுத்து, மாணவர்கள், பல்கலைக்கழகத்தை விட்டு வேளியேறினர்.



அத்துடன், பரீட்சை எழுதுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள மாணவர்களும் ஏனைய மாணவர்களை பரீட்சைக்கு அனுமதிக்குமாறு கோரி, பரீட்சையை பகிஷ்கரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக தென் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம். நாஜிம் தெரிவிக்கையில்:-

'மாணவர்கள் சிலருக்கு, விரிவுரைகள், வெளிக்களப் பயிற்சிகள் மற்றும் பாட விதான செயற்பாடுகளில் 80 சதவீதமான வரவு போதுமானதாக இல்லை. அந்த சில மாணவர்களுக்கே, இவ்வாறு பரீட்சை எழுதுவதற்குரிய அனுமதி அட்டை வழங்கப்படவில்லை. எனினும், அனுமதி அட்டை வழங்கப்பட்ட மாணவர்களும் பரீட்சையை பகிஷ்கரித்துள்ளனர்.

ஏனைய பீடங்களில் பரீட்சைகள் முடிவடையவுள்ள நிலையில், வர்த்தக முகாமைத்துவ மாணவர்கள், வேண்டும் என்று ஏனைய மாணவர்களையும் அழைத்துக் கொண்டு, இந்த பரீட்சை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், வகுப்புத்தடை செய்யப்பட்டுள்ள6 மாணவர்களுக்கு எதிரான விசாரணை முடிவுற்ற பின்னர், அந்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றலாம்.

இதேவேளை, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சட்டதிட்டங்களுக்கு அமைய 80 சதவீதத்துக்கும் குறைவானவரவைக் கொண்ட மாணவர்களுக்கு, பரீட்சை எழுது வதற்கு எந்தப் பல்கலைக் கழகத்திலும் அனுமதி வழங்கப்படுவதில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். (எ)

# திருமலை–கல்முனை சேவையில் ஈடுபட்ட இ.போ.ச. பஸ் மீது கல்வீச்சு!




திருகோணமலை - கல் முனை சேவையில் ஈடுபட்ட இலங்கைப் போக்குவரத்துச்சபையின் ஏறாவூர் டிப்போவுக்குச் சொந்தமான பஸ் மீது, குருக்கள்மடம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.45 மணிக்கு கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் பஸ் சாரதியான ஏறாவூரைச் சேர்ந்த முத்தலிப் பிர்தௌஸ் (வயது 38) என்பவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் காத்தான் குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்வீச்சுக்குள்ளாகிய பஸ்ஸின் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன.

சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு உடனடியாக விரைந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சிவப்பு நிறக் கார் ஒன்றில் வந்த நபர்களே இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கின்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, திருகோணமலை மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் சிலர் அந்த பஸ் சாரதி மற்றும் நடத்துநருடன் நேற்றுமுன்தினம் காலை, தகராறில் ஈடுபட்டிருந்தனர் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

# சிங்கப்பூர்–இலங்கை இடையே சுதந்திர வர்த்தக உடன்பாடு!



கொழும்பு, ஜூலை 20

இந்த ஆண்டு இறுதிக்குள் சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்பாடு கையெழுத்திடப்படும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து, கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

அதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு-

இந்த ஆண்டு இறுதிக்குள் சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்பாடு இறுதி செய்யப்படும்.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சிங்கப்பூர் பிரதமர் லீ சென் லூங் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார் என்றும் தெரிவித்துள்ளார். (க)

# இலங்கை இராணுவத் தளபதியுடன் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பு!



இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர பயிற்சித் திட்டங்கள் தொடர்பாக, இலங்கை இராணுவத் தளபதியுடன், இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை, இந்திய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் அசோக் ராவ் மற்றும் துணை பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் ஜி.எஸ்.கிளயர் ஆகியோர் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர பயிற்சித் திட்டங்கள் தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

இரண்டு நாடுகளின் இராணுவக் கட்டமைப்புகளுக்கு இடையிலும், மேலும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதன் அவசியம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. (க)

# நல்லாட்சி அரசில் அரசியல் பழிவாங்கல் இல்லை!

**விஜயகலா மகேஸ்வரன் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில்**



நல்லாட்சி அரசில் அரச உத்தியோகத்தர்கள் எவருக்கும் அரசியல் பழிவாங்கல் இல்லை என இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றி வந்த மூன்று கிராம அலுவலர்கள் முன்னைய அரசால் பணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

மூன்று கிராம அலுவலர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வேலை செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு முன்னைய அரசுடன் அராஜக ஆட்சி நடத்தியவர்களால் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டனர்.

இவர்களுக்கு நல்லாட்சி அரசில் அவர்களது வேலை மீளவும் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது.

இனிமேல் அரசியல் பழிவாங்கல்கள் எவையும் இல்லை. கிராம சேவையாளர்களோ அல்லது எந்த ஓர் அரச அதிகாரிகளும் அவர்களது கடமைகளை உரிய முறையில் செய்ய முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# வவுனியா புதிய பஸ் நிலையத்தை திறப்பதில் இழுபறி நிலைமை ஏன்?

**எல்லாமே அரசியல்தான் என்கிறார் மயூரன்**

வவுனியா, ஜூலை 20

வவுனியா புதிய பஸ் நிலையத்தை திறப்பதில் காணப்படும் இழுபறி நிலைக்கு அதன் பின்னால் செயற்படும் பெரிய அரசியல் சக்தியே காரணம் என வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய பஸ் நிலையத்தில் இருந்து மாவட்டங்களுக்கு இடையிலானதும் மாகாணங்களுக்கு இடையிலானதுமான பஸ் சேவைகளை மேற்கொள்வது எனவும் தற்போது நகர மத்தியில் உள்ள பஸ் நிலையத்தில் இருந்து உள்ளூர் சேவையை செயற்படுத்துவது எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நடைமுறையை ஒரு மாதகாலத்திற்குச் செயற்படுத்துவது என இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக வர்த்தகர் சங்கத்தினர் புதிய பஸ் நிலையத்துக்கு பஸ்கள் முழுமையாக சென்றால் வர்த்தகர்கள் பாதிக்கப்படுவர் என்ற கோரிக்கையை இதன்போது முன் வைத்திருந்தனர். இதன் பிரகாரமும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் நேரக் காப்பாளர்களுக்கான கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய பஸ் நிலையத்தை திறப்பதில் காணப்படும் இழுபறி நிலைக்கு அதன் பின்னால் செயற்படும் பெரிய அரசியல் சக்தியே காரணம்.

இல்லையானால் பெரும் தொகையில் கட்டப்பட்ட பஸ் நிலையம் திறக்கப்படாமல் உள்ளமை தொடர்பில் அரசு அக்கறையின்றியுள்ளது.

குறிப்பாக, இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் இலங்கை மக்கள் காங்கிரஸ், சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி என்பன தொழிற்சங்கங்களை உருவாக்கியுள்ளன. தமது அரசியல் செயற்பாடுகளுக்காக தொழிற்சங்கங்களை தவறாகப் பயன்படுத்துகின்றனர் எனத் தெரிவித்தார். (100)

# முல்லைத்தீவில் இராணுவத்தின் சுழியோடும் பயிற்சிப் பாடசாலை!







கொழும்பு, ஜூலை 20

முல்லைத்தீவு- நாயாறில், சிறப்புப் படைப் பிரிவுக்கான சுழியோடும் பயிற்சிப் பாடசாலை ஒன்றை இலங்கை இராணுவம் புதிதாக அமைத்துள்ளது.

இங்கு பயிற்சி பெற்ற 38 பேர் கொண்ட முதல் அணியினர் வெளியேறும் நிகழ்வு நேற்று நாயாறு கடலேரியை அண்டிய, பயிற்சிப் பாடசாலை சுற்றுப் புறத்தில் இடம் பெற்றது.

இலங்கை இராணுவத்தின் கொமாண்டோ ரெஜிமென்ட்டின் தலைமை அதிகாரியும், 14ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியுமான, மேஜர் ஜெனரல் ரால்ப் நுகேரா, இந்த நிகழ்வில் பங்கேற்று 12 வாரப் பயிற்சிகளை முடித்த சண்டை சுழியோடும் கற்கை நெறியை முடித்த 4 அணியைச் சேர்ந்த படையினருக்கான பட்டிகளை அணிவித்தார்.

# பாதாள உலகக் குழுத் தலைவரை இலங்கையிடம் ஒப்படைக்கத் தயார்

## இந்தியத் தூதரகம் கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 20

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் அங்கொட லொக்காவை இலங்கையிடம் ஒப்படைக்கத் தயார் என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அங்கொட லொக்காவை ஒப்படைக்குமாறு கோரினால், அவரை ஒப்படைப்பதற்கு சந்தர்ப்பம் உண்டு என்று தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோதமான முறையில் இந்தியா ஊடாக டுபாய் செல்ல முயற்சித்த போது அங்கொட லொக்காவை இந்திய அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

விசா இன்றி தங்கியிருப்போரைத் தடுத்து வைக்கும் விசேட பிரிவு ஒன்றில் அங்கொட லொக்கா இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# சமுர்த்திப் பயனாளிகள் தெரிவை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டும்

## அமைச்சர் திஸாநாயக்கவுக்கு சந்திரகுமார் கோரிக்கை



தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சமுர்த்திப் பயனாளிகள் தெரிவை மீண்டும் மீளாய்வுக்குட்படுத்தி பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்யுமாறு சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளர் மு. சந்திரகுமார், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மிக மோசமான போரால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு காணப்படுகின்றன. அங்கு வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். எனவேதான் 2013 ஆம் ஆண்டு அங்கு சமுர்த்தி அறிமுகப்படுத்தும் போது முப்பது வீதமானவர்களுக்கு வழங்கப்பட்டது.

அதாவது 11 ஆயிரத்து 550 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. இருந்த போதும் மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டதன் காரணமாக நாங்கள் அறுபது வீதமானவர்களுக்கு சமுர்த்தியை வழங்குமாறு கோரியிருந்தோம்.

அதனடிப்படையில், மேலும் 11 ஆயிரத்து 500 குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகளாக சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுவரை அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில், தற்போது சமுர்த்தி பயனாளிகள் மீளாய்வு செய்யப்பட்டு தெரிவுகள் இடம்பெற்றுள்ள நிலையில் அது மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சமுர்த்திப் பயனாளிகளை மீளாய்வு செய்வதற்காக விண்ணப்பப் படிவங்கள் வழங்கி பூரணப்படுத்தப்பட்டபோது சரியானதகவல்கள்வழங்கப்படவில்லை. இதனால் அது கணினிமயப்படுத்தப்பட்டு கணினி மூலம் புள்ளியிடப்பட்டு புதிய சமுர்த்தி பயனாளிகள் தெரிவு இடம்பெற்றபோதே பொது மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இதனால் பல மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே பொருத்தமான ஒரு முறையின் ஊடாக சமுர்த்திப் பயனாளிகள் தெரிவுகள் மீளவும் மேற்கொள்ளப்படவேண்டும்.

அத்துடன், போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் எனும் வகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் விசேட முன்னுரிமை அளிக்கப்பட்டு சமுர்த்தி உதவித் திட்டங்கள் மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என்பதையும் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.-என்றுள்ளது. (எ)

# தினசரி ராசி பலன் 20.07.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 05 ஆம் நாள் துவாதசித்திதி பி.இ. 1.02 மணி வரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம்: ரோகினி மாலை 5.25 மணி வரை. பின்னர் மிருகசீரிடம். மரணயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 1.51 மணி முதல் 3.25 மணி வரை. சுபநேரம்: காலை 7.32 மணி முதல் 9.20 மணி வரை. இன்று வைஷ்ணவ ஏகாதசி விரதம். திவசம் செய்ய வேண்டிய வழிபாடு: ரோகினி**

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்** : சுபீட்சமான நாள். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். நினைத்தவை நிறைவேறும். வெளி நாட்டு உறவினரிடமிருந்து விலையுயர்ந்த பரிசுப் பொருள்கள் வந்து சேரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**ரிஷபம்** : இனிமையான நாள். குடும்பத்தில் இனிமை பூத்துக் குலுங்கும். நண்பர்களுடன் சேர்ந்து சிலர் உல்லாசப் பயணம் செல்வார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம்** : கவலையான நாள். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். பயணத்தின் போது உடைமைகள் காணாமற்போகும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

**கடகம்** : நன்மையான நாள். குடும்பத்தில் ஒற்றுமை நீடிக்கும். வியாபாரம் பன்மடங்கு பெருகும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத வகையில் உயர்ச்சிகள் கிடைக்கும்.

**சிம்மம்** : சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம் அதிகரிக்கும். குடும்ப அமைதி குறையும். உத்தியோகத்தில் பொறுப்புகள், அலைச்சல்கள் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறைவடையும்.

**கன்னி** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வியாபாரத்தில் துரித முன்னேற்றமடையும். விவசாயம் விருத்தியடையும்.

**துலாம்** : யோசனையான நாள். வியாபாரம் தேக்க நிலையில் இருக்கும். தொழிலில் பொறுப்பும், மனவிரக்தியும் உண்டாகும். மாணவர்கள் தேர்வுகளில் தோல்வி அடைவார்கள்.

**விருச்சிகம்** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். தொழிலில் பிரயாசைக்கேற்ற பலன் குறையும்.

**தனுசு** : அலைச்சல் மிகுந்த நாள். வெளிநாடுசெல்ல விரும்பிய சிலர் ஏஜென்சியின் உதவியை நாடுவார்கள். சுயதொழில் செய்ய விரும்பிய சிலர் வங்கிகளின் உதவியை நாடுவார்கள்.

**மகரம்** : இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும்.

**கும்பம்** : கவலையான நாள். குடும்பத்தில் வீண் சண்டை, சச்சரவுகள் உண்டாகும். சிலர் செய்யும் தொழிலை இழக்க நேரும். வியாபாரம் மந்தகதியில் நடக்கும்.

**மீனம்** : சம பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளால் பணப் பற்றாக்குறை ஏற்படும். வீடு, வாகனத் திருத்தச் செலவுகள் உண்டாகும். பயணங்களைத் தவிர்க்கவும்.

**சந்திராட்டமநாள்: சித்திரை 3, 4 சுவாதி விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள் ஆகியவற்றில் பிறந்தோர் இந்நாளில் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# டெங்கு பரவும் சூழலைத் தடுக்க பேரணியூடான விழிப்புணர்வு




ஹற்றன், ரிகோபோத் பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு பரவும் சூழலைத் தடுக்கும் பேரணியூடான வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஹற்றனில் நடைபெற்றது.

நாட்டில் அதிகரித்து வரும் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கையைத் தொடர்ந்து பொது மக்களை அறிவுறுத்தும் முகமாக, கழிவுகளை வகைப்படுத்துவதற்கு வேறுவேறான வர்ணங்களில் பொலித்தீன் பொருளுக்கு ஒரு வர்ணமும், உக்கும்குப்பை, கண்ணாடி, உலோகங்கள் போன்றவற்றைப் பிரித்து வர்ண குப்பை தொட்டிகளில் இடுவது தொடர்பாக பொது மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் இந்த வேலைத்திட்டம் அமைந்திருந்தது.

ஹற்றன் டிக்கோயா நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் கே.பாலகிருஷ்ணனின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, ஹற்றன் டிக்கோயா நகர சபை செயலாளர் மற்றும் அதிகாரிகள், பாலர் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# மேலும் 3 தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பது குறித்து அரசு ஆலோசனை

## உயர் கல்வி அமைச்சர் கிரியெல்ல கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் மேலும் மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாக உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் அவர் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் அரசு வழங்கி வரும் இலவசக் கல்வியைப் போலவே தனியார் கல்வியையும் ஊக்குவிக்க வேண்டியது அவசியமாகும்.

அரச பல்கலைக்கழகங்களுக்குத் தகுதிபெறும் சகல மாணவர்களுக்கும் அங்கு அனுமதி வழங்குவதற்கு முடியாது.

எனவே, தனியார் நிறுவனங்கள் மூலம் அவர்களுக்கு வாய்ப்புகளைப் பெற்றுத்தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

தனியார் மருத்துவக் கல்வியை குறுகிய நோக்கத்தில் பார்க்காமல் தொலைநோக்குடன் பார்க்க வேண்டும். நாட்டின் எதிர்காலம் அவ்வாறான பரந்த மனப்பான்மையின் மூலமே சிறப்பாக அமையும்.

எனவே, அரச பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கான வாய்ப்புகள் கிடைக்காதவர்கள் தனியார் மருத்துவக்கல்லூரிகள் மூலம் தங்களது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பளிப்பதில் எவ்வித தவறும் கிடையாது.-என்றார். (எ)

காலைக்கதிர் Kalaikkathir





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



39




## அத்தியாயம் - III

## ஒற்றுமையும் பிரிவும்

விடுதலைப் புலிகள் ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் இணைந்து கொண்டதை உடனடுத்து, 1985 ஆம் ஆண்டு ஏப்ரல்/மே மாத காலப்பகுதியில் தமிழ் விடுதலை அமைப்புகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையே போர் ஓய்வு பற்றி ஆராயப்பட்டது. இது 1985 ஆம் ஆண்டு ஜூனில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் பின் 1985 ஆம் ஆண்டு ஜூலை/ ஓகஸ்ட் மாதங்களில் பேச்சுக்கும் திட்டம் இடப்பட்டது. இந்தியாவின் ஆதரவின் கீழ் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சு நடத்தப்பட்டது. இந்திய அரசின் அனுசரணையுடன் 1985 ஆம் ஆண்டில் தமிழ் அரசியல் அமைப்புகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையே நடந்த அந்தப் பேச்சு 'திம்புப் பேச்சு' என்று அழைக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றிலே ஒரு முக்கிய நிகழ்வாகத் திம்புப் பேச்சு அமைந்தது. முதற் தடவையாக ஆயுதம் தரித்த தமிழ் விடுதலை அமைப்புகளும், மிதவாத அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்த் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று, கூட்டாகவும் ஏக மனதாகவும் கேட்டுத் தீர்மானித்தன. தமிழ் மக்கள் அனைவரும் ஏகோபித்த குரலாக முன்வைத்த சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைத் தங்கள் தேசியப் பிரச்சினையின் அடி ஆதாரக் கோரிக்கையாக முன்வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அரசியல் தீர்வுக்கான அந்த உரிமையின் அடிப்படையில், இனப் பிரச்சினையின் அடிநாதமாக நான்கு கோட்பாடுகளைத் தமிழ்ப் பிரதிநிதிகள் முன்வைத்தார்கள்.

*1. தமிழ் மக்கள் தம்மை ஒரு தேசிய இனமாக வரித்துக் கொள்கிறார்கள்.*

*2. தமிழ் மக்களுக்கு வரலாற்று ரீதியாக அடையாளம் காட்டக்கூடிய ஒரு தாயகம் உண்டு; அதன் மீது அவர்களுக்கு பிரத்தியேக உரிமை உண்டு.*

*3. தமிழ் மக்கள் தனித்துவமான தேசிய இனம் என்ற வகையில் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு.*

*4. தமிழ் மக்களுக்கு அனைத்து அடிப்படை மனித உரிமைகளும் குடியியல் உரிமைகளும் உள்ளன.*

இந்தக் கோட்பாடுகள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும் தமிழ்ப் பிரதிநிதிகள் வாதிட்டார்கள். அத்துடன், தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான அர்த்தமுள்ள நிரந்தரத் தீர்வு இந்த அடிப்படைகள் மீது வகுக்கப்பட்டதாக வேண்டும் என்று சிறிலங்கா அரசுக்கு தெளிவாகத் தெரிவித்தார்கள்.

திம்புவில், சிறிலங்கா அணிக்குத் தலைமை தாங்கியவர் ஒரு மூத்த அரசியல் வாதியல்லர். அரசுத் தலைவர் ஜூனியஸ் ஜெயவர்த்தனாவின் சகோதரரும் சட்டத்தரணியுமான ஹெக்ரர் ஜெயவர்த்தனாவே தலைமை தாங்கினார். தமிழரின் அணியால் முன்வைக்கப்பட்ட பிரதான கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள ஹெக்ரர் ஜெயவர்த்தனா மறுத்தார். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையோ, அவர்களுக்கெனத் தனியான பாரம்பரியத் தாயகம் உண்டு என்பதையோ, சுய நிர்ணய உரிமைக்கு அவர்கள் உரித்தானவர்கள் என்பதையோ ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று அவர் நிராகரித்தார். தமிழ் அணி முன்வைத்த கோட்பாடுகள் சிறிலங்காவின் ஐக்கியத்தையும் இறையாண்மையும் நிராகரிப்பதால், அவற்றைச் சிறிதேனும் ஏற்க முடியாது என்று அவர் வாதிட்டார். சிறிலங்கா அரசும் சரி, தமிழ்அரசியல் அமைப்புகளும் சரி, தங்கள் தங்கள் நிலையிலே விடாப்பிடியாக நின்று விட்டுக் கொடாது உறுதியாக நின்றமையால் பேச்சு முடக்கம் அடைந்தது. நடுவராக நின்ற பண்டாரிக்கு, பேச்சு நடத்தும் திறனோ ராஜதந்திர மதியூகமோ இல்லாதமையால், அவரால் இணக்கம் ஒன்றைக்கொண்டு வர முடியவில்லை. மாறாக, அவையடக்கமற்ற குறிப்புகளை அவர் வெளியிட்டு, ரெலோவின் பிரதிநிதியாகத் திம்புப் பேச்சில் கலந்துகொண்ட நடேசன் சத்தியேந்திரா செம்மையாக வாங்கிக் கட்டிக் கொண்டார்.

திம்புப் பேச்சில் புலிகளின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்ட திலகருடனும் அன்ரனுடனும் தொலைபேசி மூலம் பாலா அடிக்கடி தொடர்பு வைத்துக் கொண்டார். பூட்டான் தலைநகருக்கும் சென்னைக்கும் இடையே நேரடித் தொலைத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. தமிழ் நாட்டில் உள்ள ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ஈ.என்.எல்.எவ்) தலைவர்கள் திம்புவில் உள்ள தங்கள் பிரதிநிதிகளுடன் உட



னுக்குடன் தொடர்புகொள்ள இது வாய்ப்பாக இருந்தது. இந்தியப் புலனாய்வாளர்கள் ஒட்டுக் கேட்பதற்கு இந்த நேரடித் தொலைபேசி பெரும் வாய்ப்பாக அமைந்தது. இந்த வாய்ப்பு பாலாவுக்கு கிடைத்தமை எமக்குக் கெடுதியாகவே முடிந்தது. தமிழ் நாட்டில் உள்ள ஈ.என்.எல்.எவ். தலைவர்களுக்கும் திம்புவில் உள்ள அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் இடையே என்ன உரையாடல் நடக்கிறது என்பதை அறிய இந்திய வெளியுறவுப் புலனாய்வுப் பிரிவான 'றோ' மிக ஆர்வமாக இருக்கும் என்பது பாலாவுக்குத் தெரியும். ஆகவே, ஈ.என்.எல்.எவ்.தலைமைப் பீடத்தின் முடிவுகள் மற்றும் நகர்வுகள் தொடர்பான பின்னணிச் சிந்தனைகள் என்ன என்பதைத் தவிர்த்து, வெறும் செய்திகளை மட்டுமே பாலா அறிவித்துக் கொண்டிருந்தார். திம்புப் பேச்சு முறிவு அடையும் கட்டத்தை எய்திக் கொண்டிருந்தபோது, 1985 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் நாளன்று வடபுல நகரமான வவுனியாவில் பயங்கரப் படுகொலை ஒன்று நடந்தது. வெறிகொண்ட இராணுவத்தினர் தமிழ்ப் பொதுமக்கள் பலரை வெட்டிச் சரித்தார்கள். இது போர் நிறுத்த ஒப்பந்தத்தை முற்றிலும் மீறுவதாக அமைந்தது. திம்புப் பேச்சு நடைபெறுவதற்கு, போர் நிறுத்த ஒப்பந்தம் ஒரு முக்கிய நிபந்தனையாக இருந்தது. பிரபாகரன் சீற்றம் கொண்டார்; கடும் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டார். இந்தச் சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து திம்புப் பேச்சில் இருந்து வெளியேறுமாறு இயக்க பிரதிநிதிகளுக்கு அறிவிப்பதென பிரபாகரனும் ஈ.என்.எல்.எவ். இன் ஏனைய தலைவர்களும் கூட்டாக முடிவெடுத்தார்கள். நேரடித்தொலைபேசி மூலமாக இந்தச் செய்தியை ஈ.என்.எல்.எவ். பிரதிநிதிகளுக்கு அறிவிக்குமாறு பாலா கேட்கப்பட்டார். பாலாவும் அப்படியே செய்தார். ஆறு தமிழ் அரசியல் அமைப்புகளின் பிரதிநிதிகளும் திம்புப் பேச்சிலிருந்து கூட்டாக வெளியேறினார்கள். இதன் விளைவாக பேச்சு முறிவடைந்தது. புதுடில்லி சீற்றம் அடைந்தது. திம்புப் பேச்சு முறிவடைய விடுதலைப் புலிகளின் ஆலோசகரே காரணர் என்று 'றோ' முடிவு கட்டியது.


## பாலா நாடு கடத்தப்பட்டார்

எமது பயிற்சிப் பாசறைகள் பல தமிழ்நாட்டிலே நன்கு நிறுவப்பட்டு இருந்தன. இந்தியா எம் மட்டில் கடுமையாக நடக்கத் தீர்மானித்து, தமிழ் நாட்டில் நாம் இருப்பதை எமக்கு எதிராகப் பயன்படுத்தி அரசியல், ராஜதந்திர நெருக்குவாரத்தை பிரயோகிக்க முற்பட்டால் அது எம்மைப் பெரிதும் பாதிக்கும் என்பதை நாம் உணர்ந்திருந்தோம். ஒருபுறம் றொமேஷ் பண்டாரி கொழும்பை மிரட்டி, தமிழ்ப் போராளிகளுக்கு மேலும் உதவி வழங்கப்போகிறார் எனக் கூறிக்கொண்டிருக்க, மறுபுறம் பயிற்சிப் பாசறைகளைக் கலைத்து, தமிழ் நாட்டிலிருந்து வெளியேற்றப் போவதாக மிரட்டிப் போராளிக் குழுக்களைக் கொழும்புடன் பேச இசையுமாறு புதுடில்லி அவர்களை நிர்ப்பந்தித்துக் கொண்டிருந்தது. திம்புப் பேச்சுக்கு முன்னரே இப்படியான நிலை ஏற்படலாம் என்று விடுதலைப் புலிகளிடமும் புதுடில்லியில் இருந்த ஏனைய போராளி அமைப்புகளிடமும் மூத்த இந்திய அதிகாரிகள் கூறியிருந்தார்கள். திம்புப் பேச்சிலிருந்து நாம் வெளியேறி, பேச்சு பொசுக்கென்று முறிந்துவிட்டதால், இந்தியாவின் அதிருப்தியை நாம் சம்பாதித்து விட்டோம் என்று நாம் உணர்ந்திருந்தோம். திம்புப் பேச்சு முறிவு, புதுடில்லிக்கும் தமிழ்ப் போராளி அமைப்புகளுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தி இருந்தது. தனது மத்தியஸ்தப் பங்களிப்பு, சூழ்ச்சியால் தகர்க்கப்பட்டதாக இந்தியா கருதியது. தெற்கு ஆசியாவிலே தனது வல்லரசு அந்தஸ்துக்கு தமிழ் ஆயுதக் குழுக்களே அவமானம் ஏற்படுத்துகின்றன என இந்தியா கருதியது. ஏதாவது தண்ட நடவடிக்கை மூலம் தனது அதிருப்தியை இந்தியா வெளிப்படுத்தும் என்று நாம் எதிர்பார்த்தோம். என்ன நடக்கும் என்பது பற்றி, பேச்சுக்கு முன்னதாகவே நானும் பாலாவும் பேசியிருந்தோம். பேச்சு முறிவடைந்த பின், என்ன நடக்கப் போகிறதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தோம். அது தவிர, ஈ.என்.எல்.எவ். தலைமையிடம் இருந்து திம்புப் பிரதிநிதிகளுக்குச் செய்திகளையும் அறிவுரைகளையும் அவர்களுடைய அனுசரணையின்படி பாலா அனுப்பிக் கொண்டிருந்தமையை 'றோ' தவறாகப் புரிந்து கொண்டிருந்தது என்பது எமக்குத் தெரியும். இதன் பலன் விரைவிலே தெரிந்தது.

(தொடரும்...)

# வாக்குக் கேட்டோம்; வென்றோம் மக்களுக்கு நன்மை செய்தோமா?

## மாற்றுத் தலைமை ஏன்? ஈ.பி.ஆர்.எல்.எவ். விளக்கம்



ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மே மாதம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைக் கையாள்கின்ற பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையில் சுமத்தப்பட்டது.

அப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அங்கம் வகித்தன. யுத்தத்திற்குப் பின்னர் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வவுனியா நகரசபைக்கும் யாழ்.மாநகரசபைக்கும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

முகாமில் அடைக்கப்பட்டிருந்த மக்கள் தொடர்பாகவும் ஒட்டுமொத்த யுத்தம் தொடர்பாகவும் வன்னி மக்களும் யாழ்ப்பாண மக்களும் எத்தகைய உணர்வுகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக இலங்கை அரசு இந்த இரண்டு தேர்தல்களையும் நடத்தியது.

வேட்புமனுக்களில் கையெழுத்திட்டு தேர்தல் திணைக்களத்திடம் கையளிப்பதற்கேகூட தமிழரசுக் கட்சியின் செயலாளர் வவுனியா வரமுடியாத நிலையில் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு ஒருநாள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அனுராதபுரம் சென்று மாவை சேனாதிராசாவின் கையெழுத்தை வாங்கி வந்து வேட்பாளர்களை நியமித்து அந்தத் தேர்தலுக்கு முகங்கொடுத்தோம்.

### வேட்பாளர்கள் பின்வாங்கினர்

வேட்பாளர்களாகப் பெயர்கொடுத்தவர்கள் பலர் இறுதி நேரத்தில் பின்வாங்கினர். அப்படியிருந்தபொழுதிலும் கூட கூட்டமைப்பு வெல்ல வேண்டும் அதன் மூலம் அரசுக்குத் தெளிவான செய்தி சொல்லப்படவேண்டும் என்பதை முன்னிறுத்தி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கடினமாகப் போராடி வவுனியா நகரசபைத் தேர்தலில் பெரும்பான்மையான ஆசனத்தை வெற்றிகொள்ள வைத்தது. பயத்தின் நிமித்தம் வேட்பாளர்களே ஒதுங்கியிருந்த நிலையிலும் தமிழரசுக் கட்சி பிரசாரத்திற்கு வருவதற்கே



அஞ்சிய நிலையிலும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியே அந்த வெற்றியைத் தேடிக்கொடுத்தது.

இதனைப் போன்றே யாழ் மாநகர சபைத் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் ஒருவரும் முன்வராத நிலையில் - குறிப்பாக இளைஞர்கள் முன்வராத நிலையில் - யாழ்ப்பாணத்திற்கு வெளியிலிருந்து இளைஞர்களை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி களமிறக்கியது. அது மாத்திரமல்லாமல், வேட்பாளர்களே பிரசாரத்திற்கு வருவதற்கு அஞ்சிய நிலையிலும் தமிழரசுக் கட்சியின் செயலாளர் உள்ளிட்ட அனைவரும் மாட்டின் வீதி காரியாலயத்தில் முடங்கியிருந்த நிலையிலும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும்தான் வீதி வீதியாகப் பிரசாரங்களில் ஈடுபட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக அரும்பாடுபட்டன.

### அனைவருமே புரிந்து கொள்ள வேண்டும்

இவ்வாறு இராணுவத்தினதும் புலனாய்வுப் பிரிவினரதும் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தவும் ஐக்கியத்தைக் காக்கவும் மக்களுக்கு நம்பிக்கையூட்டவும் தமிழினம் தோற்றுவிடவில்லை என்பதை நிலைநாட்டவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் தங்களது கட்சிச் சின்னங்களை விடுத்து வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு பிரசாரத்தில் ஈடுபட்டன. இவ்வாறுதான் தமிழரசுக் கட்சி காப்பாற்றப்பட்டது என்பதை இன்று பதவிக்காக வந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒவ்வொரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் மிகத் தெளிவாக வரையறை செய்யப்பட்டன.


1. வடக்கு - கிழக்கு மீண்டும் இணைக்கப்படவேண்டும்.
2. தமிழ் மக்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை என்பவை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.
3. சமஷ்டி அரசமைப்பு முறையிலான அதிகாரப் பங்கீடு மேற்கொள்ளப்படவேண்டும்.
4. இவை எல்லாவற்றின் அடிப்படையிலும் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசத்தில் ஒரு சுயாட்சி அரசு உருவாக்கப்படவேண்டும்.

இந்தக் கொள்கைகளின் அடிப்படையில், ஒரு தீர்வுத்திட்டமும் தயாரிக்கப்பட்டது. இதனடிப்படையிலேயே மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் பேச்சிலும் ஈடுபட்டோம். மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுக்கள் அவசியம் என்பதை ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி தொடர்ந்தும் வலியுறுத்திவந்தது. குறைந்த பட்சம் பேச் சுக்கள் குழம்புகின்றபொழுது யாரால் எவ்வாறு பேச்சுக்கள் குழம்பின என்பதை சர்வதேச சமூகம் அறிந்துகொள்வதற்காகவாவது இந்த மூன்றாம் தரப்பு தேவைப்பட்டது.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். நிராகரித்தது

ஆனால், அதனை தமிழரசுக் கட்சி தவிர்த்தே வந்தது. பேச்சுக்களை நிராகரித்த மஹிந்தராஜபக்ஷ நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கின்றேன் என்றும் அங்கு சென்று எமது பிரச்சினைகள் தொடர்பாகப் பேசும்படியும் கூறினார் அவர். பொழுது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அதனை நிராகரித்தது. மேற்சொன்ன நான்கு முக்கியமான விடயங்களில் இருதரப்புக்கும் இடையில் முடிவுகள் எட்டப்பட்டால் மாத்திரமே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்குச் செல்வதில் பிரயோசனம் இருக்கும் என்று நாம் வலியுறுத்தினோம். அதன் பின்னரே கூட்டமைப்பின் தலைவர் தெரிவுக்குழுவுக்குச் செல்வதில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்தார்.

இப்பொழுது அவ்வாறானதொரு பேச்சு புதிய அரசுடன் ஏற்படுத்தப்பட



வேண்டும் அதுவும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தியபோதும் இன்று அதனை ஏற்றுக்கொள்வதற்கு சம்பந்தன் தயாராக இல்லை. மாறாக 51பேர் கொண்ட ஓர் அரசியல் சாசன வழி நடத்தல் குழுவில் இந்த விடயங்கள் எல்லாம் பேசப்படும் என்று எமக்குச் சொல்லப்பட்டது. அது ஒரு சரியான வழிமுறையல்ல. வழிநடத்தல் குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளவர்களில் மிகப் பெரும்பான்மையோர் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றமையால் எமது கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்படும் என்றும் ஆகவே, இருதரப்புப் பேச்சு என்பது முக்கியம் என்றும் நாம் வலியுறுத்தியபோதும் அது, செவிடன் காதில் ஊதிய சங்காகவே, இருந்தது.

1. வடக்கு-கிழக்கு இணைக்கப்படமாட்டாது. இது தொடர்பாக யாரும் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என்று அரச தரப்பின் அமைச்சர்களும் பிரதமர் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்டவர்களும் கூறுகின்றனர்.
2. ஒற்றையாட்சியில் எந்தவித மாற்றமும் இல்லை. அதனை யாரும் கோரவுமில்லை எனவும் அரசதரப்பிலிருந்து சொல்லப்படுகிறது.
3. பௌத்தத்திற்கு முதலிடம் என்பதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை அதனை மாற்றுமாறு யாரும் கோரவுமில்லை எனவும் அரச தரப்பினரால் மகாநாயக்கர்களுக்கு விளக்கமளிக்கப்படுகிறது.

# தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித்தனம்

## இரு முகங்கள் காட்டி நிற்பது நியாயமா?

## மாற்றுத் தலைமை ஏன்? ஈ.பி.ஆர்.எல்.எவ்.விளக்கம்











**வாக்களித்த மக்களுக்கு சொல்லத் தயக்கம் ஏன்?**

ஆனால், இவைதான் எமது அடிப்படைப் பிரச்சினைகள். இவற்றை மையமாக வைத்துத்தான் பேசுவோம் என்று தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டவர்கள் நாம் அரச தரப்புடன் இவ்வாறுதான் பேசினோம். அரச தரப்பினர் பொய் கூறுகிறார்கள் என்று கூட தமக்கு வாக்களித்த மக்களுக்குச் சொல்ல முடியாமல், வாய் அடைத்துப்போய் நிற்பதைப் பார்க்கின்றபொழுது இவர்கள் ஒட்டுமொத்தமாகவே தமிழ் மக்களின் சகல கோரிக்கைகளையும் கைவிட்டுவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

புதிய அரசைக் கொண்டுவருவதனூடாகப் பல சாதனைகளைப் படைக்கலாம் என்று கூறி புதிய ஜனாதிபதிக்காக வாக்குச் சேகரித்துக் கொடுத்தவர்களால் மக்களை தமது சொந்தக் காணிகளில் முழுமையாக மீளக் குடியேற்ற முடியவில்லை.

இராணுவத்தினரின் வசமுள்ள காணிகளை மீட்டெடுக்க முடியவில்லை. வடக்கு மாகாணத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இராணுவத்தின் ஆக்கிரமிப்பைக் குறைக்க முடியவில்லை.

காணாமல் போகச்செய்யப்பட்டோர் தொடர்பில் காத்திரமான முடிவுகள் எதனையும் பெற்றுக்கொடுக்கமுடியவில்லை.

**இதுவரை ஒன்றுமே செய்ய முடியவில்லை**

அரசியல் கைதிகளின் விடுதலைக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்ய முடியவில்லை.

யுத்தத்திற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. வடக்கு-கிழக்கெங்கும் பௌத்தர்கள் வாழாத இடங்களில் உருவாக்கப்படும் பௌத்த விகாரைகளை கட்டாமல் நிறுத்த முடியவில்லை.

இவ்வாறு எந்த விடயங்களிலும் ஒரு முறையான பேச்சை அரச தரப்புடன் நடத்தி அதன் சாதக, பாதக விடயங்களை மக்களுக்குத் தெரிவிக்க முடியாத ஒரு தலைமையாகவே சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சி இயங்கி வருகிறது.

இது ஒருபுறமிருக்க, ஒரு சர்வதேச விசாரணையூடாகவே இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வர முடியும் என்பதுடன், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்குச் சர்வதேச விசாரணை என்பது மிக அவசியம் என்பதை மஹிந்த ராஜபக்ஷவின் காலகட்டத்தில் வலியுறுத்திவந்த சம்பந்தன், பின்னர் அமெரிக்காவின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை அரசு முன்வைத்த உள்ளக விசாரணையை ஏற்றுக்கொண்டமை மாத்திரமல்லாமல், அதன் மூலம் சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கையைப் பாதுகாக்கவும் முற்பட்டார்.

அப்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்தவுக்கும் ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் இடையில் கொழும்பில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒரு பிரகடனத்தின் பிரகாரம் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரும் ஓராண்டுக்குள் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என்று கூறியபோதிலும்கூட எதுவுமே நடைபெறவில்லை. இதன் பின்னர், தருஸ்மன் தலைமையிலான மூன்றுபேர் கொண்ட ஒரு குழு பான் கீ மூனினால் நியமிக்கப்பட்டு, அது இலங்கையில் நடைபெற்ற மனிதவுரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆய்வு செய்தது. இதனடிப்படையில், இலங்கையில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை நடைபெற்றதற்கான சாத்தியப்பாடு உள்ளதென்றும் அதனைத் தொடர்ந்தும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் பரிந்துரை செய்திருந்தார்கள். இதனடிப்படையில், ஐ.நா. செயலாளர் நாயகம் அந்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் கையளித்து தொடர்ந்தும் இலங்கை தொடர்பாக அவதானம் செலுத்தும்படி கோரியிருந்தார்.

**சம்பந்தனின் தனிப்பட்ட முடிவு**

இதன் பிரகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் விசாரணைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவது என்று முடிவு செய்தபோதிலும் 2012ஆம் ஆண்டு ஐ.நாவிற்குச் செல்வதற்கான தேவையில்லை என்ற முடிவை சம்பந்தர் எடுத்தார். அந்த முடிவுகூட சம்பந்தரின் தனிப்பட்ட முடிவாக இருந்ததுவே அன்றி கூட்டமைப்பின் முடிவாக இருக்கவில்லை.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆரம்பம் முதல் இன்றுவரை தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையை வலியுறுத்தியது மாத்திரமல்லாமல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் அதன் அங்கத்துவ நாடுகளிலும் தனித்தும் கூட்டாகவும் இதனை வலியுறுத்தி வந்துள்ளது. ஐ.நா. மனித உரிமைப்பேரவையின் இத்தகைய விசாரணைகள் தொடர்பாக திட்டவட்டமான நிலைப்பாடுகள் சம்பந்தரிடமோ தமிழரசுக் கட்சியிடமோ இல்லாதமையால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செயற்பாட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான செயல்களில் ஈடுபடவும் சம்பந்தரது நடவடிக்கைகளே காரணமாக அமைந்தன.

மனிதவுரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கெதிரான குற்றங்கள் மற்றும் சித்திரவதைகள், இன ஒழிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் இலங்கை அரசும் ஈடுபட்டிருப்பதாக அத்துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த சர்வதேச நிபு ணர்கள் கூறியபோதிலும்கூட அவையெல்லாவற்றையும் கைவிட்டு. இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் சம்பந்தன், சேனாதி மற்றும் சுமந்திரன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றமையையே இன்று காணக்கூடியதாக உள்ளது.

**வசதி வாய்ப்பு வந்தால் கைவிடுவதா?**

சர்வதேச விசாரணை இன்றேல், எந்தவிதமான தீர்வும் எட்டப்படமுடியாது என்று கூறிவந்த சம்பந்தர், தனக்கும் தமது சகாக்களுக்கும் சில வசதிகளும் வரப்பிரசாதங்களும் கிடைத்ததன் காரணமாக தாமே முன் வைத்த சகல கோரிக்கைகளையும் கைவிட்டுள்ளார் என்றே தோன்றுகின்றது.

ஆகவே, அடிப்படையில், சம்பந்தனதும் தமிழரசுக் கட்சியினதும் காய் நகர்த்தல் என்பது மிகப் பெரிய தோல்விகளையே சந்தித்து வருகிறது. இந்த இக்கட்டான சூழலில்கூட இந்த விடயங்களை மீளாய்வு செய்யாமல் தமிழர்களுக்கு ஒரு கருத்தும் சிங்கள மக்களுக்கு ஒரு கருத்துமாக இரு முகங்களைக் காட்டிநிற்கும் போக்கு தமிழ் மக்கள் தமது தலைமையின்மீது வைத்திருந்த நம்பிக்கையை சிதறடிக்கும் ஒரு போக்காகவே நாம் பார்க்கிறோம்.

**மாகாணசபை குழப்பங்களுக்கு மூலகாரணம் தமிழரசுக் கட்சியே!**

இறுதியாக அண்மையில் வடக்கு மாகாண சபையில் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்களும் தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையும் அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் அதன் பேச்சாளர் சுமந்திரன் எடுத்த முயற்சிகளும் கொடுத்த வழிகாட்டுதல்களும் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள்மீது தமிழ் மக்கள் மத்தியில் பெரிய வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. மாகாணசபையை திறம்பட நடத்துவதற்கு வழிகாட்ட வேண்டியவர்கள் அதனைச் சீர்குலைப்பதற்கு முன்னின்று உழைத்தார்கள். மக்கள் அணிதிரண்டு வந்து இந்த சீர்குலைப்பு நடவடிக்கைக்கு எதிராக நடத்திய பெரும் போராட்டங்களிலிருந்து தமிழரசுக் கட்சி நிறையவே பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

**கிடைத்த சந்தர்ப்பம் கை நழுவிப் போயின**

யுத்தத்திற்கு பின்னர் எமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்கள் கைநழுவ விடப்பட்டன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவுடன் எமது பிரச்சினை தொடர்பில் ஓர் உடன்பாட்டுக்கு வருமாறு கோரினோம். அது கைவிடப்பட்டது.

ஆட்சி மாற்றம் என்பது அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் தேவைப்பட்டது. அவர்களுடன் பேசி சில முக்கிய விடயங்களைக் கையாண்டிருக்கலாம். அதுவும் கைவிடப்பட்டது.

ஐ.நா. சபையில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியிருக்கலாம். அதுவும் கைவிடப்பட்டது.

எமது முக்கிய கோரிக்கைகள் தொடர்பாக அரசுடன் ஒரு வெளிப்படையான பேச்சை நடத்தி தீர்வுகளை எட்ட முயற்சித்திருக்கலாம். அதற்கான சர்வதேச சூழல்களும் கனிந்திருந்தன. அதனை நாங்கள் வலியுறுத்தியபோது அதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

நாடாளுமன்றம், மாகாண சபைகளில் இருக்கக்கூடிய எமது பிரதிநிதித்துவ பலத்தைப் பிரயோகித்து எமது அன்றாட பிரச்சினைகளான மீள்குடியேற்றம், காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் திட்டவட்ட முடிவுகளை எடுத்திருக்கலாம். ஆனால், அவற்றின்மீது உரிய அக்கறை செலுத்தப்படவில்லை.

வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்பட வேண்டிய பல விடயங்கள் இரகசியம் பேணுதல் என்ற அடிப்படையில் நடந்ததாலும் பங்காளிக் கட்சிகளுடன்கூட பேச்சு மற்றும் கலந்துரையாடல்களை நடத்தத் தயங்கியதாலும் அரசியல் சாசன விவகாரத்தில் உள்ளார்ந்த நடவடிக்கைகளை எம்மால் அறிய முடியவில்லை. இந்த இரகசிய நடவடிக்கைகள் என்பது தமிழ்ச் சமூகத்தை இன்று நட்டாற்றில் தள்ளிவிட்டிருக்கிறது. தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாட்டால் ஏற்பட்டுள்ள இந்த அவல நிலைக்கு ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பங்காளி களாக்க அந்தக் கட்சி எத்தனிக்கிறது.

தமிழரசுக் கட்சியின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளும், அந்த கட்சி உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் இராஜதந்திர ரீதியில் அடைந்து வரும் தோல்விகளாலும் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் சர்வாதிகாரத் தனமான நடவடிக்கைகளாலும் வெளிப்படைத் தன்மையற்ற அரசுடன் இணைந்த இரகசிய வேலைத்திட்டங்களாலும் ஐக்கியம் என்று சொல்லிக் கொண்டே ஐக்கியத்தை சீர்குலைப்பதாலும் இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு கூட்டான மாற்றுத்தலைமை தேவை என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கருதுகின்றது.

**சுரேஷ் க. பிரேமச்சந்திரன்**
தலைவர்,
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி









யாழ்.நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப் பாண பல்கலைக்கழகக் கல்லூரியில் அண்மையில் நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வு நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரி வுரையாளர் வைத்தியர் சுரேந்திரகுமார், யாழ். வைத்தியசாலை நீரிழிவு நிலைய வைத்தியர் Dr.பரமேஸ்வரன் மற்றும் நீரிழிவுக் கழகத் தலைவர் தி.மைக்கல் ஆகியோர் உரையாற்றுகின்ற மையையும் படத்தில் காணலாம். (இ-19)









மன்னார் பேசாலை பற்றிமா மகா வித்தியா லயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் அருட்சகோதரர் ஜே.ஸ்டானிஸ்லாஸ் தலை மையில் அண்மையில் பாடசாலை யின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடை பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் பா.டெனீஸ் வரனின் அழைப்பின் பேரில் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் கலந்து சிறப்பித் தார். (எ)



கேப்பாப்பிலவு காணி விடுவிப்புப் போராட் டத்தில் கலந்து கொண்டிருக்கும் ஒரு மூதாட்டி சக்கர நாற்காலியிலேயே நடமாடி வருகிறார் எனவும் தனது சக்கர நாற்காலி பழுதடைந்து விட்டது எனவும் ஒரு புதிய நாற்காலியை தந்துதவுமாறு போராட்டம் நடத்தும் அந்த மக்களைச் சந்திக்கச் சென்ற வேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய நேற்று நாடாளுமன்ற உறுப்பினரால் அந்த மூதாட்டிக்கு புதிய நாற்காலி வழங் கப்பட்டது. (எ)







'மறைக்கப்பட்ட மனிதர்களின் பதிவு கள்' என்ற காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆவணம் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தால் திங்கட்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் வெளியிடப் பட்டது. பாதிக்கப்பட்ட மக்களால் இந்த ஆவணத்தின் முதலாவது பிரதி மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரி பாலகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டது. (எ-81)

குருபூர்ணிமாவை முன்னிட்டு மதுரை ஆனந்த சாயி நிலையத்தில் இருந்து தரு விக்கப்பட்ட சத்யசாயி பாபாவின் திருப் பாதச் சுவடிகளுக்கும் சென்னை மயிலாப் பூர் சீரடி சாயி பாபா ஆலயத்தில் இருந்து தருவிக்கப்பட்ட சீரடி சாயி பாபாவின் திருப்பாதச் சுவடிகளுக்கும், கொழும்பு புதுச்செட் டித்தெருவில் அமைந்துள்ள சாயி நிலையத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இதன் போது, பூஜைகள் நடைபெறுவதையும், சாயி மத்திய நிலையத் தலைவர் எஸ்.என். உதயநாயகன் உரையாற்றுகின்றமையை யும், பஜனையில் கலந்துகொண்டோரை யும் படங்களில் காணலாம்.







## அம்பாந்தோட்டையில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம்!

சூரியவெவ - மிரிஜ்ஜவில வீதி, அம்பாந்தோட்டை மேம்பாலத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில், இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சூரியவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபர், அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, அம்பாந்தோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# நல்லாட்சியில் இலங்கையர் என்ற அடையாளத்துடன் பன்மைத்துவத்தைப் பேணி முன்நோக்கிச் செல்வோம்!

## 'பீப்பிள்ஸ் ஒவ் ஸ்ரீலங்கா' நூல் வெளியீட்டில் மனோ

கொழும்பு, ஜுலை 20

பழைய பிழைகளைத் திருத்திக் கொண்டு முன்நோக்கிச் செல்ல வேண்டிய காலம் நல்லாட்சியில் உருவாகியுள்ளது. இந்தச் சூழலில், பன்மைத்துவத்தைப் பேணி, இலங்கையர் என்ற அடையாளத்துடன் முன்நோக்கிச் செல்ல வேண்டும் என்று தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.



தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள 'பீப்பிள்ஸ் ஒவ் ஸ்ரீலங்கா' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இலங்கையின் 19 இனக் குழுமங்கள் பற்றிய விவரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று எமது நாட்டுக்கு மட்டுமல்ல, முழு உலகத்துக்குமே முக்கியமான தொருநாளாகும். எமது நாட்டின் பல்லின கலாசாரத்தையும் மக்களின் வாழ்வியலையும், இன்று நாம் வெளிக் கொண்டு வந்திருக்கிறோம்.

எனக்கு இனம், மொழி, மதம் உண்டு. அதேபோல் எனது சகோதரர்களுக்கும் உண்டு. எனது சகோதரர்களுக்கு, அவை தொடர்பில் உள்ள அக்கறையை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். இந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏனைய சமூகங்கள், அவற்றின் கலை, கலாசாரங்கள் தொடர்பில் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இது ஜனநாயக நாடு. இங்கே ஏராளமான அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஏராளமான நிறங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், நாம் எல்லோரும் இலங்கையர்கள் தான். எமது பொது நோக்கு, அதுவாகவே இருக்க வேண்டும்.

எனக்கு முதல் இந்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார்கள். அதனைப் பன்மடங்காக்கி சேவையாற்ற வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கிறது. - என்றார். (எ)

# நெவில்பெர்னாண்டோ மருத்துவமனை போதனா வைத்தியசாலையே இல்லை

**அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு**

'சைட்டம்' மாணவர்களுக்கு, மருத்துவப் பயிற்சிகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலை, எப்போதுமே போதனா வைத்தியசாலையாகச் செயற்பட்டதில்லை என்று குற்றஞ்சாட்டிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், அந்த வைத்தியசாலை, தள வைத்தியசாலையாக்கூட இருக்கவில்லை என்றும் தெரிவித்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில், சங்கத்தின் உதவிச் செயலாளர் சமந்த ஆனந்த, இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சைட்டம் மாணவர்களை, அரச தள வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதற்கான அரசின் முடிவு, பெயரில் போதனா என்று கொண்டிருப்பதைத் தாண்டி, போதனா வைத்தியசாலையாக இருப்பதற்கான குறைந்தபட்சத் தரத்தைக் கூட அந்த வைத்தியசாலை கொண்டிருக்கவில்லை.

நெவில்பெர்னாண்டோ வைத்தியசாலையை, அரசுடைமையாக்குமாறு, பொது மக்களோ, சிவில் சமூகக் குழுக்களோ, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்களோ, மாணவர் சங்கங்களோகோரவில்லை. டொக்டர் நெவில் பெர்னாண்டோ மாத்திரமே அவ்வாறு கோரினார். -என்றார். (எ)

# சமணங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பாலம் திறந்து வைக்கப்பட்டது



வவுனியா, ஜுலை 20

வவுனியாவில் சமணங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பாலம் மக்கள் போக்குவரத்துக்காக நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சமணங்குளம் கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அரசியல் பிரதிநிதிகளுடன் மக்கள் சந்திப்பு ஒன்றும் இடம் பெற்றிருந்தது. அவ்வேளை கிராமத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலும் மக்கள் பிரதிநிதிகளு டன் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன் எஸ். மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

# வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களை ஒன்றிணைத்து புதிய தொழிற் சங்கம்

யாழ்ப்பாணம், ஜுலை 20

வடமாகாணத்தில் பல்வேறு முன்பள்ளிகளிலும் கடமையாற்றும் ஆயிரத்து 437 ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் தொழிற்சங்கம் என்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.



2015 ஆம் ஆண்டு 34 இணைப்பாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொழிற் திணைக்களத்தில் ஒரு தொழிற் சங்கமாகப் பதியப்பட்டது.

இதன் பின் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் 'வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்க' யாப்பிற்கு அமைய நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் இவ்வருடத்துக்கான நிர்வாகிகள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

முதலாவது பொதுக் கூட்டத்துக்கு வடமாகாணத்தில் உள்ள 12 வலயங்களில் இருந்தும் ஐந்து உறுப்பினர்கள் வீதம் (கிளைத் தலைவர், கிளைச் செயலாளர், கிளை நிதிச் செயலாளர் மற்றும் கிளை உறுப்பினர்கள் இருவர்) அறுபது உறுப்பினர்கள் பங்கேற்கத் தகுதி பெற்றிருந்தனர்.

அவர்களில் 52 பேர் முதலாவது பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களில் இருந்தே மாகாண மட்ட ஆட்சிக்குழுத் தெரிவு செய்யப்பட்டது.

வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களை அங்கத்தவர்களாக ஒன்றிணைத்தல், அவர்களின் வாண்மையை விருத்தி செய்தல், முன்பள்ளி கல்விக்கான கல்வித்திட்டத்தை உருவாக்கல், முன்பள்ளி ஆசிரியர்களின் தொழில் நலனை பாதுகாத்தல், தேசிய மட்டத்தில் முன்பள்ளி சேவைகளை உருவாக்கல், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஏற்படும்பிரச்சினைகளை தெரிந்து அவற்றை எதிர்கொண்டு தீர்வுகாணல் ஆகிய நோக்கங்களை முன்வைத்து இந்த அமைப்புஉருவாக்கப்படுகின்றது.

**புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:**

தலைவர் திருமதி யோ.கேமநளினி, செயலாளர் செல்வி ச.ஜெகதாரணி, நிதிச்செயலாளர் செல்வி நா.நிரஞ்சனா, உபதலைவர் திருமதி சி.அருள்வேல்நாயகி, உபசெயலாளர் திருமதி சி.சிவகௌரி, உபநிதிச் செயலாளர் திருமதி பற்றிக். மேரிபவுலின் குரூஸ், நிர்வாகச் செயலாளர் திருமதி த.மரியதர்சினி.

**கிளை அலுவலர்கள்**

திருமதிஜெ.கௌசலா, செல்வி தி.ஜெகதீஸ்வரி, திருமதி த.கணேஸ்வரி, செல்வி கா.விஜயகுமாரி, திருமதி ஜீ.எவ்.பாரதி.

**போஷகர்:**

அறுதல்நிறுவனத்தின் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா. (உ)

# சுங்க 'ஒன்லைன்' கொடுப்பனவு இன்று முதல் நடைமுறைக்கு!

கொழும்பு, ஜுலை 20

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 'ஒன்லைன்' கொடுப்பனவுத் திட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் கீழ் இயங்கும் லங்கா கிளியர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஊடாக, தேசிய கொடுப்பனவு தளம் செயற்படுத்தப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சுங்கத் திணைக்களம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தப் புதிய செயற்றிட்டம் இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் சட்ட ரீதியான திட்டமாக இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ)

# சசிகலாவை பொறுமையாக காத்திருந்து பொறி வைத்து பிடித்தது மத்திய அரசு!



பெங்களூர், ஜூலை 20

பெங்களூர் சிறையில் சசிகலா சிறப்பு சலுகைகள் பெற 2 கோடி ரூபா லஞ்சம் கொடுத்தது மத்திய அரசுக்கு ஏப்ரல் மாதமே தெரியும் என புதிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

முறைகேடாக சொத்து குவித்து 4 ஆண்டுகள் தண்டனை பெற்றுள்ள சசிகலா பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சிறைக்குள் போய் 5 மாதம் முடிந்துள்ள நிலையில் அவர் லஞ்சம் கொடுத்து ஏராளமான சலுகைகளை அனுபவித்து வந்தமை அம்பலமாகி உள்ளது. 5 அறைகள் கொண்ட தனி இடம், டி.வி., சொகுசு மெத்தை உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் அனுபவித்து வந்ததை டி.ஐ.ஜி. ரூபா ஆதாரத்துடன் வெளிப்படுத்தி உள்ளார்.

சசிகலா தரப்பில் சிறை துறை அதிகாரிகளுக்கு 2 கோடி ரூபா கொடுக்கப்பட்டதாகவும் டி.ஐ.ஜி. ரூபா தனது கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார். ஆனால், பணப் பரிமாற்றம் கடந்த ஏப்ரல் மாதமே மத்திய அரசுக்குத் தெரிந்து விட்டது.

அதன் பிறகுதான் சசிகலா தரப்பில் இருந்து சிறைத் துறை அதிகாரிகளுக்கு லட்சம் லட்சமாக பணம் கொடுக்கப்படுகின்றமையை ஆதாரத்துடன் அம்பலப்படுத்த ஏற்பாடுகள் நடந்தன. அதன் படிதான் தற்போது இந்த விவகாரத்தில் சசிகலா சிக்கியுள்ளார்.

### பிரகாஷின் வாக்குமூலம்

சசிகலா சிக்குவதற்குக் கர்நாடக மாநில முன்னாள் உள்துறை அமைச்சர் பரமேஸ்வரரின் உதவியாளர் பிரகாஷ் என்பவர் கொடுத்த வாக்கு மூலம் தான் காரணமாக அமைந்தது.

இதுபற்றிய விவரம் வருமாறு:-

அ.தி.மு.க.வின் இரட்டை இலை சின்னத்தைப் பெற தலைமை தேர்தல் கமிஷன் அதிகாரிகளுக்கு 50 கோடி ரூபா லஞ்சம் கொடுக்க முயன்ற சம்பவம் கடந்த ஏப்ரல் மாதம் பரபரப்பை ஏற்படுத்தியது.

அ.தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் இடைத்தரகர்கள் மூலம் அந்த லஞ்சத்தை கொடுக்க முயன்றார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் டி.டி.வி. தினகரனின் நண்பர்களில் ஒருவரான பெங்களூரைச் சேர்ந்த மல்லிகார்ஜுனா என்பவரையும் டில்லி பொலிஸார் விசாரித்தனர். அவரது செல்போனை ஆய்வு செய்தபோது முன்னாள் உள்துறை அமைச்சர் பரமேஸ்வரின் உதவியாளர் பிரகாஷுடன் அவர் பல தடவை பேசியிருக்கின்றமை தெரிந்தது.

இதையடுத்து டில்லி பொலிஸார் பிரகாஷ் மீது சந்தேகப்பட்டனர். பிரகாஷ் மூலம்தான் 10 கோடி ரூபா டில்லிக்கு வந்திருக்கும் என்று நினைத்தனர்.

அதை உறுதிப்படுத்த பிரகாஷை பொலிஸார் டில்லிக்கு அழைத்து விசாரித்தனர்.

அப்போது பிரகாஷ் தேர்தல் ஆணையக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற விவகாரத்தில் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று உறுதிப்படத் தெரிவித்தார். டில்லி பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரித்த போது அவர், தினகரனை தெரியும். ஆனால், அவரிடம் டில்லிக்கு எந்தப் பணத்தையும் அனுப்பவில்லை என்று கூறினார்.

அதே சமயத்தில், தினகரன் மூலம் பெங்களூர் சிறை துறை அதிகாரிகளுக்கு லட்சக்கணக்கில் பணம் கொடுக்கப்படுகிறது என்று கூறியுள்ளார். சசிகலாவுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கு 2 கோடி ரூபா தினகரன் தரப்பில் இருந்து கொடுக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதைக் கேட்டதும் டில்லி பொலிஸார் அதிர்ச்சி அடைந்தனர். அவர் கொடுத்த இந்த வாக்குமூலத்தை டில்லி பொலிஸார் 306 ஆவது சட்டப்பிரிவின் கீழ் வாக்குமூலமாகப் பதிவு செய்துள்ளனர்.

### 2 கோடி ரூபா கை மாறியது

பெங்களூர் சிறையில் விதிகளை மீறி சலுகைகளைப் பெற 2 கோடி ரூபா கை மாறியது பற்றி டில்லி பொலிஸார் மத்திய உள்துறையிடம் தகவல் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்தே சசிகலா தரப்பினரை பொறி வைத்துப் பிடிக்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி, கடந்த 2 மாதமாக பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறை கண்காணிக்கப்பட்டு வந்தது.

அப்போது சசிகலா தனக்குத் தேவையான எல்லா வசதிகளையும் சிறைக்குள் அனுபவித்துக் கொண்டிருக் கின்றமை தெரிய வந்தது. மேலும் ஒவ்வொரு சலுகையும் பெற ஒவ்வொரு தடவையும் பணம் கொடுக்கப்படுவதும் தெரிய வந்தது. சிறைத் துறையில் பல்வேறு உயர் அதிகாரிகள் சசிகலா தரப்பிடம் இருந்து பணம் பெற்றமையும் கண்டு பிடிக்கப் பட்டது.

அந்த வகையில், 2 கோடி ரூபாவுக்கு மேல் பணம் கொடுக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு சந்தேகித்தது. இதைத் தொடர்ந்தே அதிரடி நடவடிக்கைகள் மூலம் சசிகலா பெற்றுவரும் சலுகைகள் அம்பலப்படுத்தப்பட்டன.

### வீடியோக் காட்சி எடுத்தனர் கைதிகள்!

இந்த விடயத்தில் சசிகலாவைக் குறிவைத்து எடுக்கப்பட்டுள்ள வீடியோ படங்கள் ஆதாரமாக மாறி உள்ளன. அந்த வீடியோ காட்சிகள் அனைத்தும் திட்டமிட்டு எடுக்கப்பட்டவை எனத் தெரிய வந்துள்ளது. அந்த வீடியோ காட்சிகளைப் பதிவு செய்வதற்கு கைதிகளே பயன்படுத்தப் பட்டுள்ளனர்.

அந்தக் கைதிகள் தான் தற்போது அதிரடியாக வேறு வேறு ஜெயிலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர் எனக் கூறப்படுகிறது. சசிகலாவுக்குக் தெரியாமலேயே இவை நடந்தன எனத் தெரிய வந்துள்ளது.

### டி.ஐ.ஜி. ரூபா முக்கிய பங்கு

இந்த விவகாரத்தில் டி.ஐ.ஜி. ரூபாவின் பங்கு மிக முக்கிய மானதாகக் கருதப்படுகிறது. அவர் சிறைத் துறைக்கு வருவதற்கு முன்பு வேறொரு துறையில் இருந்தார்.

பெங்களூரில் அவரது வீட்டுக்கு அருகே மத்திய அமைச்சர் ஒருவர் வசித்து வருகிறார். அவரும் ரூபாவும் ஒருநாள் காலையில் நடை பயிற்சிக்குச் சென்றபோது பேசிக்கொண்டே சென்றுள்ளனர்.

அப்போதுதான் சசிகலா பற்றிய தகவல்கள் விவாதிக்கப் பட்டுள்ளன. சிறையில் சசிகலா விதிகளை மீறிச் சலுகைகளை அனுபவிக்கின்றமையை அவர்கள் விவாதித்தனர்.

இதையடுத்து டி.ஐ.ஜி. ரூபா சிறைத்துறைக்கு மாற்றப்பட்டார் என ஒரு தகவல் வெளியாகி உள்ளது.

## தினகரன் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்!

டில்லி, ஜூலை 20

இரட்டை இலை சின்னம் பெற தேர்தல் ஆணைய அதிகாரிக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் கைது செய்யப்பட்ட டிடிவி.தினகரன் மீது எதிர்வரும் 25 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று டில்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சிறையில் சசிகலாவுக்கு எந்தச் சலுகையும் அளிக்கப்படவில்லை என்கிறார் தினகரன்!



பெங்களூர், ஜூலை 20

சிறையில் விதிமுறைகளை மீறி சசிகலாவுக்கு எந்தச் சலுகையும் அளிக்கப்பட வில்லை என்று அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் டிடிவி. தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''சசிகலா ஷொப்பிங் செய்து வந்தமை போன்ற புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. உண்மையில் விதிமுறைகளை மீறி சிறையில் சசிகலாவுக்கு எந்த சலுகையும் அளிக்கப்பட வில்லை. சிறையில் இருப்பவர்களைத் தேவை இல்லாமல் வம்புக்கு இழுக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெங்களூரில் உள்ள பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. அம்மா அணி பொதுச் செயலாளர் சசிகலாவுக்குச் சிறப்பு சலுகை அளிக்கப்பட்டுள்ளது என முன்னாள் சிறைத்துறை அதிகாரியான டி.ஐ.ஜி. ரூபா முறைப்பாடு தெரி வித்தார்.

இதற்காக, சிறைத்துறை டி.ஜி.பி. சத்தியநாராயணாவுக்கு 2 கோடி ரூபா லஞ்சம் கொடுக்கப்பட்டது எனவும் அவர் தனது முறைப்பாட்டில் கூறினார். இது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மேலும் சசிகலா வண்ண உடைகளில் வலம் வருகின்றமை போன்ற வீடியோ காட்சிகள் ஊடகங்களில் வெளியாகின என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கமலுக்கு திருவோடு அனுப்பும் போராட்டம்: இந்து இளைஞர் பேரவை நடத்தியது!




சென்னை, ஜூலை 20

நடிகர் கமலஹாசனுக்கு திருவோடு அனுப்பும் போராட்டத்தில் இந்து இளைஞர் பேரவையினர் ஈடுபட்டுள்ளனர்.

தனியார் தொலைக் காட்சியில் ஒளிரப்பாகி வரும் நிகழ்ச்சியில் கமலஹாசனின் செயல்பாட்டை விமர்சித்து ஏற்கெனவே பொலிஸில் இந்து இளைஞர் பேரவை முறைப்பாடு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், மதுரையில் நேற்று முன்தினம் இந்து இளைஞர் பேரவையினர் இதன் அமைப்பாளர் பார்த்தசாரதி தலைமையில் தபாலில் திருவோடு அனுப்பும் புதிய போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து பார்த்தசாரதி கூறுகையில்-

'குறிப்பிட்ட மதக்கடவுளை மட்டுமே கமலஹாசன் விமர்சிக்கிறார். அவரது செயற்பாடு குறிப்பிட்ட சிலருக்கு எதிராகவே உள்ளது. அவருக்குத் தேவை பணம். இதற்காக எதை வேண்டுமானாலும் செய்வார். இதனால் அவருக்குத் திருவோடு ஏந்தி பிச்சை எடுத்தும், அதில் சேர்ந்த பணம் மற்றும் திருவோட்டை கமலஹாசனுக்கு தபாலில் அனுப்பும் போராட்டத்தில் ஈடுபட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழக எம்.எல்.ஏக்கள் சம்பளம் உயர்ந்தது இரு மடங்காக!

சென்னை, ஜூலை 20

தமிழக எம்.எல்.ஏக்களின் மாத சம்பளத்தை இரு மடங்காக உயர்த்தி முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

தமிழக எம்.எல்.ஏ க்கள் தங்களது மாத சம்பளத்தை உயர்த்த வேண்டும் என நீண்ட நாள்களாக கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

இந்நிலையில், தமிழக சட்டசபையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது.

இதைத் தொடர்ந்து எம்.எல்.ஏ-க்களின் மாதச் சம்பளம் 55 ஆயிரத்திலிருந்து 1.05 லட்சமாக உயர்த்தப் படுகிறது என முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்தார்.

மேலும், தொகுதி மேம்பாட்டு நிதி 2 கோடியிலிருந்து 2.5 கோடியாக இனி உயர்த்தி வழங்கப்படும் எனவும் முதல்வர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்புக்கு எம்.எல்.ஏக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

(க

# ஆயுத சந்தையில் காலடி எடுத்து வைக்கும் சீனா; அமெரிக்காவுக்கு போட்டியாக புதிய விமானங்கள்!



பீஜிங், ஜூலை 20
சுமார் 1000 கிலோ எடையுள்ள ஆயுதங்களை சுமக்கக் கூடிய ஆளில்லா சி.எச்.-5 விமானங்களை சீனா தயாரித்துள்ளது.

அமெரிக்காவின் எம்.கியூ-9 ரீப்பர் ஆளில்லா தாக்குதல் விமானங்களுக்குப் போட்டியாக சீனா சி.எச்.-5 ரெய்ன்போ ஆளில்லா விமானங்களின் வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளது என அந்நாட்டு பாதுகாப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக சீனா பெய்ஹாங் பல்கலைக்கழக பேராசிரியர் வாங் சாங் கருத்து தெரிவிக்கையில்-

சீனாவின் இந்த ஆளில்லா போர் விமானங்கள் அமெரிக்காவின் போர் விமானங்களின் உற்பத்திச் செலவில் அரைப் பகுதி தான் பயன்படுத்தப்படுகிறது.

எனினும், அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களை ஒப்பிடும்போது எங்களுடையது சற்று பலவீனமானதுதான். அமெரிக்க ரீப்பர் ஆளில்லா விமானங்கள் 12 ஆயிரம், 15 ஆயிரம் மீற்றர்கள் உயரம் வரை செல்லும் இதன் மூலம் தரையிலிருந்து தாக் கப்படும் வாய்ப்புகளிலிருந்து அது தப்பிவிடும்.

ஆனால், சீனாவின் இந்த ஆளில்லா தாக்குதல் விமானம் 9000 மீற்றர்களே உயரம் செல்லும், இதனால் இதனை தரையிலிருந்து தாக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, போர் விமானத் தொழில் நுட்பத்தில் சீனா இன்னமும் மேற்கு நாடுகளுக்குச் சமமாக விளங்க முடியவில்லை. இதுதான் சீனா உற்பத்தி செய்யும் அனைத்து விமானங்களின் பலவீனமும் ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ரீப்பர் ஆளில்லா தாக்குதல் விமானம் உலகிலேயே அதிக செலவில் தயாரிக்கப்படுவதாகும்.

அதாவது, 16.9 மில்லியன் டொலர்கள் செலவாகும். சீனாவின் இந்த ட்ரோன் விமானங்கள் அதில் பாதிச் செலவில் தயாரிக்கப்பட்டு விடும்.

சீனாவின் சி.எச்.-5 விமானத்தின் இறக்கை 21 மீற்றர்களாகும். சுமார் 1000 கிலோ எடையுள்ள ஆயுதங்களை இது சுமக்கவல்லது.

இது வானில் 60 மணி நேரம் வரை இருக்கும். சுமார் 10,000 கி.மீ. வரை பறந்து தாக்குதல் நடத்த வல்லது.

இதன் மூலமாக ஆயுதச் சந்தையில் சீனாவும் அடியெடுத்து வைத்துள்ளது.

(க)

## ‘ஒபாமா கேர்’ காப்பீட்டை ரத்து செய்யும் முயற்சி அமெரிக்க நாடாளுமன்றத்தில் மீண்டும் தோல்வி!



வொஷிங்டன், ஜூலை 20
அமெரிக்க நாடாளுமன்றத்தில் ‘ஒபாமா கேர்’ காப்பீட்டு திட்டத்தை ரத்து செய்யும் முயற்சி மீண்டும் தோல்வி அடைந்துள்ளது. இது ட்ரம்புக்கு மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவில் ஒபாமா ஜனாதிபதியாக இருந்தபோது தனது கனவுதிட்டமாக ‘ஒபாமா கேர்’ என்ற மலிவு கட்டண காப்பீட்டுத் திட்டத்தை கொண்டுவந்தார்.

ஆனால், கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப், இந்த காப்பீட்டு திட்டத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்.

அவர் தேர்தலில் வெற்றி பெற்று, கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் பிறப்பித்த முதல் நிர்வாக உத்தரவே, ‘ஒபாமா கேர்’ காப்பீட்டுத் திட்டத்தை ஒழித்துக் கட்டிவிட்டு, அதற்கு மாற்றாக வேறு ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதாகத் தான் அமைந்திருந்தது.

கடந்த மார்ச் மாதம் இதற்கான பிரேரணை அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்து நிறைவேற்ற ட்ரம்ப் திட்டமிட்டார். அதற்கான நடவடிக்கைகளை அவர் மேற் கொண்டார்.

இந்த சபையில் ட்ரம்பின் குடியரசு கட்சிக்கு அதிக ஆதரவு உள்ளதால் பிரேரணை எளிதில் நிறைவேறிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், குடியரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் பிரேரணை திரும்பப் பெறப்பட்டது. இது ட்ரம்புக்கு கிடைத்த முதல் தோல்வியாக அமைந்தது.

இந்த நிலையில், தற்போது செனட் சபையில் இந்த பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்ற ட்ரம்ப் நடவடிக்கை எடுத்தார். இந்தப் பிரேரணை நேற்று முன் தினம் அங்கு வந்தபோது, குடியரசு கட்சி உறுப்பினர்களிடையே கடும் எதிர்ப்பு ஏற்பட்டதால் இந்தப் பிரேரணையை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ட்ரம்ப் டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், ’ஒபாமா கேர் காப்பீட்டுத் திட்டத்தை அமெரிக்க நாடாளுமன்றம் உடனடியாக ரத்து செய்ய வேண்டும், புதிய காப்பீட்டுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்’ எனக் கூறிப்பிட்டுள்ளார்.

## தீவிரவாத தடுப்புக்காக ஆஸியில் தனி அமைச்சகம்!



கான்பேரா, ஜூலை 20
ஆஸ்திரேலிய அரசில் முதல்முறையாக தீவிரவாத தடுப்புக்காகத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு பிரதமர் மால்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


சர்வதேச தீவிரவாதம் மிகப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஆஸ்திரேலியாவில் தீவிரவாத அச்சுறுத்தல்களைச் சமாளிக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் ஒருபகுதியாக உளவுத்துறையை மேம்படுத்தவும் உள்நாட்டுப் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

தற்போது தீவிரவாத தடுப்புக்காகத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு மேம்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றில் பாலூட்டிய பெண் எம்.பி. இராஜினாமா!



கான்பேரா, ஜூலை 20
ஆஸ்திரேலியாவில் கிரீன்ஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், லாரிஸ்சா வாட்டர்ஸ் (வயது 40). குழந்தைக்கு தாய்ப்பாலூட்டியவாறு நாடாளுமன்றத்தில் பேசிய படக்காட்சி உலக மெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், அவர் தற்போது தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தின் படி, இரட்டைக் குடியுரிமையையோ அல்லது பல நாட்டுக் குடியுரிமைகளோ பெற்றிருக்கிற ஒருவர் எம்.பி.யாக பதவி வகிக்க முடியாது.

அந்த வகையில், லாரிஸ்சா வாட்டர்ஸ் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருந்தமையால் தனது பதவியை இழந்துள்ளார்.

## பிரான்ஸ் செல்பவர்களுக்கு விசேட பாதுகாப்பு!

பிரான்ஸ் தலைநகர் பாரிஸிற்குச் செல்லும் சுற்றுலாப் பணிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பாதுகாப்பை வழங்குவதற்கு அந்நாட்டு சுற்றுலாத்துறை புதிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு அதிகாரிகள் வெளியிட்டுள்ள தகவல்களின் படி-

பாரிஸில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களால் சுற்றுலாப் பயணிகளி டையே அச்ச உணர்வு ஏற் பட்டிருந்தது.

சுற்றுலா மையங்கள் வியாபார நிறுவனங்கள், வணிகத் துறைகள், போன்றனவற்றை 24 மணிநேரமும் பாதுகாப்பு வலயத்திற்குள் வைத்திருக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

(க)



# புதிய திட்டங்களுடன் இந்திய டெஸ்ட் தொடரை எதிர்கொள்ளவுள்ளோம்!

## அணித் தலைவர் தினேஷ் சந்திமால் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 20

இலங்கை அணியை எதிர் காலத்தில் வழிநடத்து வதற்கு ஸிம்பாப்வே அணியுடனான வெற்றி முக்கியமானதாக இருக் கிறது என இலங்கை அணியின் புதிய டெஸ்ட் அணித் தலைவர் தினேஷ் சந்திமால் குறிப்பிட்டார்.

ஆர்.பிரேமதாச சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற ஸிம்பாப்வேயுடனான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 4 விக் கெட்டுகளால் போராடி வெற்றியீட்டியது.

இதன்போது இலங்கை 388 என்ற ஓட்ட இலக்கை எட்டியே வெற்றியைப் பதிவு செய்தது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இலங்கை அணி அதிகூடிய வெற்றி இலக்கை எட்டிய சந்தர்ப் பமாக இது பதிவானது. இதற்கு முன்னர் பி. சரா மைதானத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு நடந்த தென் னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 352 என்ற ஓட்ட இலக்கை எட்டியதே சாதனையாக இருந்தது.

எனினும் நேற்று முன்தினம் முடிவடைந்த போட்டியில் இலங்கை அணி இந்த இலக்கை எட்டுவதில் கடும் சவாலை சந்தித்தது. ஸிம்பாப்வே பந்துவீச்சாளர்கள் முக்கிய விக்கெட்டுகளை குறைந்த ஓட்டங்களுக்கு வீழ்த்தி நெருக்கடி கொடுத்தனர்.

உபுல் தரங்க (27 ஓட்டங் கள்), அணித்தலைவர் தினேஷ் சந்திமால் (15 ஓட்டங்கள்) மற்றும் அஞ் சலோ மத்தியூஸ் (22 ஓட்டங்கள்) ஆகியோர் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றனர்.

ஸிம்பாப்வேயுடனான இந்தப் போட்டிக்கு பின்னர் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை அணித் தலைவர் சந்திமால் தெரிவித்தவை வருமாறு:-

ஸிம்பாப்வே அணி தற் போது சிறப்பாக உள்ளது. அவர்களை வீழ்த்துவது இலகுவானதல்ல. எனது அணி வீரர்களின் திற மையை பார்த்து தலைவர் என்ற வகையில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நான்காவது இன்னிங்ஸில் இலங்கை அணி பெற்ற அதிகூடிய ஓட்டங்கள் இதுவாகும். இது அணியை முன்னோக்கி அழைத்துச் செல்வதில் சாதகமான ஒன்றாகும் என்று குறிப் பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் மேலும் ஒன்றரை தினங்கள் எஞ்சியிருக்கும் நிலை யிலேயே இலங்கை அணி சவாலான வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத் தாடியது.

இதன்போது இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட்டை பாதுகாத்துக் கொள்வதற்கு பதில் ஓட்டங்களை குவிப் பதிலேயே ஆர்வம் காட்டி னர். இதனால் ஆரம்ப துடுப் பாட்ட வீரர் திமுத் கருணா ரத்ன அரைச் சதத்துக்கு ஓர் ஓட்டம் இருக்கும்போதும், சிறப்பாக ஆடிவந்த நிரோ ஷன் திக்வெல்ல 81 ஓட் டங்களைப் பெற்றிருக்கும் போதும் அவதானமற்ற துடுப்பாட்டத்தால் தமது விக்கெட்டை பறிகொடுத் திருந்தனர்.

இது பற்றி சந்திமால் தெரிவிக்கையில்-

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போட்டியில் எமக்கு துடுப்பெடுத்தாட கிடைத்தபோது நாம் எமக்குரிய ஆட்டத்தை விளையாடவே தீர்மானித் தோம். இருக்கும் காலத்தை வைத்து எம்மால் துடுப் பெடுத்தாடி போட்டியை சம நிலை செய்ய கடினமாக இருந்தது. அப்படி ஆடினால் நாங்கள் போட்டியில் தோல் வியைச் சந்திக்க வேண்டி ஏற்படும்.

எனவே தமக்குரிய பாணி யில் துடுப்பெடுத்தாட நாம் வீரர்களை அறிவுறுத்தி னோம். அணித் தலைவர் என்ற வகையில் தவறுக ளுக்கு நான் பொறுப்பு ஏற் கிறேன். எனவே தவறுகள் செய்யப் பயப்பட வேண் டாம் என்று நான் வீரர்களை அறிவுறுத்தினேன் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியில் போதிய டெஸ்ட் அனுபவம் அற்ற வீரர்களே அணியின் வெற்றிக்கு உதவினர். மத்திய வரிசையில் நிரோஷன் திக்வெல்ல (81 ஓட்டங்கள்), அசேல குண ரத்ன (80 ஓட்டங்கள்) ஆகிய இருவரும் பத்து டெஸ்ட் போட்டிகளில் கூட விளையாடியதில்லை.

இலங்கை அணி ஸிம் பாப்வே அணியுடனான ஒருநாள் தொடரில் தோற்ற பின்னர், அணி என்ற வகை யில் பெரும் பின்னடைவு களைச் சந்தித்திருந்தது. ஸிம்பாப்வே அணியுடனான டெஸ்ட் போட்டி ஆரம்பிப் பதற்கு மூன்று தினங்கள் இருக்கும்போதே தினேஷ் சந்திமால் இலங்கை டெஸ்ட் அணித்தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

எமக்கு வெற்றி ஒன்றே தேவைப்பட்டிருந்தது. தற்போது அது எமக்குக் கிடைத்தது. இந்த வெற்றி யின் பின்னர் வீரர்கள் நல்ல மனநிலையில் உள்ளனர் என்று சந்திமால் குறிப் பிட்டார்.

எனினும் இலங்கை அணி அடுத்து சவாலான இந்திய அணியை சந்திக்கவுள்ளது. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்திய அணியுடன் இலங்கை அணி சொந்த மண்ணில் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதுதொடர்பில் சந்திமால் தெரிவிக்கையில்-

இந்தியாவுடனான சுற்றுப் போட்டி கடும் சவாலாக இருக்கும். ஆனால் எம்மிடம் திட்டங்கள் உள்ளன.

இந்திய அணியுடன் எவ்வாறு விளையாடுவது என்பது குறித்து நாம் எதிர்காலத்தில் திட்டங் களை வகுப்போம். அணித் தலைவராக ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறும் மனநிலையை வைத்திருப்பதே எனது இலக்கு. எனவே இந்த திட்டத்தோடு போட்டிக்கு, போட்டி விளையாடுவதே எனது நோக்கமாகும் என்று குறிப்பிட்டார்.

டெஸ்ட் தரவரிசையில் ஏழாவது இடத்தில் இருக் கும் இலங்கை அணியை விடவும் இரண்டு இடங்கள் பின்தங்கி கடைசி இடத்தில் உள்ள கிரேம் கிரீமர் தலை மையிலான ஸிம்பாப்வே அணி இலங்கை அணியுட னான டெஸ்ட் போட்டியின் கடைசி நாள் வரை சிறப் பாக ஆடியபோதும் ஒருசில தவறுகளால் தொடரைக் கைப்பற்ற முடியாமல் போனது.

இலங்கை மண்ணில் ஒருநாள் தொடரில் வெற்றி பெற்று, டெஸ்டிலும் வெற்றியை நெருங்கியது எமது அணியின் சிறப்பான ஆட்டமாக இருந்தது.

எனினும் எமக்கு கிடைத்த சில வாய்ப்புகளை தவற விட்டமை ஆட்டம் எம்மிடம் இருந்து பறிபோக காரண மானது. என்றாலும், இலங்கை அணி சிறப்பாக ஆடியது என்று கிரேம் கிரீமர் குறிப்பிட்டார்.

குறிப்பாக ஸிம்பாப்வே அணியின் விக்கெட் காப்பாளர் ரெஜிஸ் சகப்வா மூன்று ஆட்டமிழப்பு வாய்ப்புகளை தவறவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரபல கிரிக்கெட் வீரரின் மனைவிக்கு அசிட் வீச்சா?

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் ஆரம்ப ஆட்ட நாயகனான தமீம் இக் பாலின் மனைவி மற்றும் மகனுக்கு லண்டனில் அசிட் வீசி தாக்குதல் என வெளியான தகவல் பொய் யானது என இக்பால் தெரிவித்துள்ளார்.

இக்பாலின் மனைவி ஆயிஸா சித்திக் மற்றும் அவரது மகன் இருவரும் லண்டனில் உள்ள உண வகத்திற்கு சென்றிருந்த வேளை அந்த உணவக உரிமையாளர் மற்றும் ஊழியர்களால் தடுக்கப்பட் டனர் எனவும், அவர் இஸ் லாமிய கலாசார உடை யான ஹபாயா அணிந்திருந் தமையால் அதை கழற்றி விட்டு உள்நுழையுமாறு உரிமையாளர் எச்சரிக்க அவர் உணவகத்தை விட்டு வெளியேறும் வேளை யிலேயே அசிட் வீசப்பட் டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளி





யிட்டிருந்தன.

இதன் காரணமாக இங்கி லாந்தில் கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடிக் கொண்டிருந்த இக்பால் இடையில் போட்டியை விட்டு விலகி நாடு திரும்பினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்தத் தகவல் பொய்யானது என இக்பால் தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதி வேற்றியுள்ளார்.

## 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தோல்வி:

# அர்ஜுன ரணதுங்கவை அடுத்து மஹிந்தானந்தவுக்கும் சந்தேகம்!



கொழும்பு, ஜூலை 20

இலங்கை கிரிக்கெட் ரசிகர்களுக்கு மிகவும் வேதனையைக் கொடுத்த 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தோல்வி குறித்து சுமார் 6 வருடங்களுக்குப் பிறகு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க கடந்த சில தினங்களுக்கு முன் பரபரப்பு குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந் தார்.

அதில், இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையில் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் சூதாட்டம் நடைபெற்றிருக்கலாம்.

எனவே, அது தொடர்பில் விசாரணை நடத்த வேண் டும் எனவும் அவர் தெரி வித்தார். எனினும் பி.பி.சி. செய்திச் சேவையுடனான நேர்காணலில் கலந்து கொண்ட 2011 உலகக் கிண்ண இலங்கை அணி யின் தலைவரும் நட்சத்திர வீரருமான குமார் சங்கக் கார, உலகக் கிண்ண இறு திப் போட்டியில் அவ்வாறு சூதாட்டம் இடம்பெற்றால் அது தொடர்பில் மேற் கொள்ளப்படும் விசார ணைக்கு பூரண ஒத்து ழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து அர்ஜுன ரணதுங்கவின் குற்றச் சாட்டு தொடர்பில் 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண இந்திய அணியில் இடம் பெற்றிருந்த கௌதம் கம்பீர், ஆசிஷ் நெஹ்ரா உள்ளிட்ட வீரர்கள் தமது கடும் எதிர்ப்பை வெளி யிட்டிருந்தனர்.

இவ்வாறான ஒரு நிலை யில், 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் விளையாட் டுத்துறை அமைச்சராக இருந்த மஹிந்தானந்த அளுத்கமகேயும் இந்த விடயம் தொடர்பில் சர்ச் சையை ஏற்படுத்துகின்ற கருத்தொன்றை தெரிவித்ததையடுத்து இந்த விடயம் மேலும் சூடுபிடிக் கத் தொடங்கியது.

2011 உலகக் கிண்ண போட்டித் தொடரின் இறுதி வரை இலங்கை அணி சிறப்பாக விளையாடியது. இதன்படி உலகக் கிண் ணத்தை இலங்கைதான் கைப்பற்றும் என அனை வரும் எதிர்பார்த்திருந் தார்கள்.

இறுதியில் இலங்கை ரசி கர்களுக்கு கவலையை ஏற்படுத்தும் வகையில் இலங்கை அணி தோல்வி யைத் தழுவியது. எனினும், இந்தப் போட்டியின் போது சந்தேகத்தை ஏற்படுத் தும்படியான சம்பவங்கள் சில பதிவானதை அவதா னிக்க முடிந்தது.

உலகக் கிண்ண போட்டி யொன்றின் இறுதிப் போட் டியில் முதற்றடவையாக அதுவும் இலங்கை அணி யில் 4 வீரர்கள் மாற்றப் பட்டனர். பொதுவாக மாற்று வீரரொருவரை இறுதிப் பதினொரு பேருக்குள் கொண்டுவரு வதற்கு தெரிவுக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும். அதன் பிறகு விளையாட் டுத்துறை அமைச்சரின் அனுமதியைப் பெறவேண் டும்.

ஆனால் அவ்வாறு எந்தவொரு நடைமுறை யையும் பின்பற்றாமல், இலங்கை கிரிக்கெட் நிறு வனத்துக்கும் அறிவிக் காமல் கடைசி நேரத்தில் இவ்வாறு 4 வீரர்களை மாற்றம் செய்துள்ளார்கள். உண்மையில் இது சந்தே கத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை அணி வீரர்கள் தங்கியிருந்த அறையில் சிரேஷ்ட வீரர் கள் புகைப்பிடித்திருந்தனர் எனவும், 40 சிகரெட் துண்டுகளை காணமுடிந்த தாகவும் அணியின் முகாமையாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

அதேபோல, போட்டித் தொடரின்போது ஒருசில மாற்றங்களை முன்னெ டுக்க உத்தரவு வழங்கப் பட்டபோதும் அவை நடை முறைப்படுத்தப்பட வில்லை என்ற குற்றச்சாட் டும் அப்போது என்னிடம் முன்வைக்கப்பட்டது என முன்னாள் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், ஏன் இதுதொடர்பில் அப்போது நீங்கள் விசாரணைகளை நடத்தவில்லை என கேட் கப்பட்ட கேள்விக்கு மஹிந் தானந்த கருத்து தெரிவிக் கையில் -

உடனடியாக விசாரணை களை ஆரம்பிக்குமாறு நான் இலங்கை கிரிக்கெட் நிறு வனத்துக்கு உத்தரவிட் டேன். அதன் பிறகு எனது ஆலோசனையின் பேரில் அது தொடர்பில் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் , காலப்போக்கில் அந்த விசாரணைகள் முடக்கப்பட்டு விட்டன. எனவே இறுதி நேரத்தில் 4 வீரர்களை மாற்றியது தொடர்பில் எனக்கு மிகப் பெரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ராங்பூர் அணியில் குசல் பெரேரா, திஸர!






கொழும்பு, ஜூலை 20

இலங்கை அணியின் அதி ரடித் துடுப்பாட்ட வீரரும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரு மான குசல் ஜனித் பெரேரா மற்றும் சகலதுறை வீரரான திஸர பெரேரா ஆகியோர் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள பங் களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் ராங்பூர் ரைடர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில காலங்களாக உபாதைகளுக்கு முகங் கொடுத்து வருகின்ற குசல் பெரேரா, அண்மையில் நிறைவடைந்த சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளின் போது தசைப்பிடிப்புக்கு உள்ளாகி குறித்த போட்டித் தொடரிலிருந்து வெளி யேறினார்.

தற்போது ஓய்விலிருக்கும் அவர், இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள இந்திய தொடரிலும் பங்கேற்க மாட்டார் என கிரிக்கெட் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

எனினும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடை பெறவுள்ள பாகிஸ்தான் அணிக்கெதிரான தொடரில் குசல் விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில், அதன் பிறகு ஆரம்பமாகவுள்ள பங்களா தேஷ் பிறீமியர் லீக் தொட ரில் பங்கேற்பார் என்று குறிப்பிடப்படுகின் றது.

தற்பொழுது 26 வயதான குசல் பெரேரா, இதுவரை 27 இருபதுக்கு 20 போட் டிகளில் பங்குபற்றி 716 ஓட்டங்களைக் குவித்துள் ளார். அது போன்றே இருப துக்கு 20 போட்டிகளில் அவரது துடுப்பாட்ட வேகம் 132.10 ஆகவும் உள்ளது.

இதேவேளை, தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்ற நெட்வெஸ்ட் இருபதுக்கு 20 போட்டித் தொடரில் க்ளொஸ்டர் ஷெயார் அணிக்காக விளையாடி வருகின்ற திஸர பெரேரா, முதல் தடவையாக பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் விளையாடவுள்ளார்.

கிரிக்கெட் உலகில் பல்வேறு நாடுகளினால் நடத்தப்படுகின்ற இருப துக்கு 20 தொடர்களில் அண்மைக்காலமாக விளையாடி வரும் 28 வயதான திஸர, இதுவரை 56 இருபதுக்கு 20 போட் டிகளில் விளையாடி 654 ஓட்டங்களையும், 36 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வருடத்தைப் போல இவ் வருடமும் ராங்பூர் ரைடர்ஸ் அணியில் மேற்கிந்திய தீவுகள் அணியின் நட்சத் திர வீரர்களான கிறிஸ் கெய்ல், சாமுவேல் பத்ரி, ஜொன்சன் சார்லஸ் மற்றும் இங்கிலாந்தின் ரவி பொபாரா ஆகிய வீரர்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் முன்னாள் வீரர் குமார் சங்கக்கார, தற்பொழுது அணியில் உள்ள அசேல குணரத்ன மற்றும் நிரோ ஷன் திக்வெல்ல ஆகிய வீரர்கள் ஏற்கனவே டாக்கா டைனமைட்ஸ் அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஷமிந்த எரங்க மீதான பந்துவீச்சுத் தடை நீக்கம்!

விதிமுறைகளுக்கு புறம் பான பந்துவீச்சுப் பாணியை கொண்டிருந்த காரணத்தால் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஷமிந்த எரங்க மீது விதிக் கப்பட்டிருந்த தடை நேற்று முன்தினம் முதல் நீக்கப் பட்டது என சர்வதேச கிரிக் கெட் சபை அறிவித்துள் ளது.

ஷமிந்த எரங்க சந்தேகத் திற்கிடமான பந்துவீச்சுப் பாணியை கொண்டிருந்தார் என கடந்த வருடம் மே மாதத்தில் இங்கிலாந்துடன்



இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது போட்டி நடுவர்களால் முறைப்பாடு செய்யப்பட் டிருந்தது. எரங்க இறுதியாக 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அயர்லாந்துடனான சர்வதேச ஒருநாள் போட்டி யில் விளையாடியிருந்த துடன், அதனைத் தொடர்ந்து பரிசோதனைகளுக்கு உட் படுத்தப்பட்ட பின்னர் அவ ரது பந்துவீச்சுப்பாணி விதி முறைகளுக்கு புறம்பானது என நிரூபணமானமை குறிப்பிடத்தக்கது.

## சிங்கப்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுக் காலை தமது துணைவியார் சகிதம் யாழ். வந்த சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் விவியன் 10.30 மணிக்கு வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து யாழ்.பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் யாழ்.பொது நூலகத்திற்கு 500 நூல்களை வழங்கினார்.

பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் யாழ்.போதனா வைத்தியசாலையைப் பார்வையிட்டார். நோயாளர் விடுதிகளையும் அவதானித்தார். நோயாளர்களுக்கு அன்பளிப்புக்களையும் வழங்கினார்.

போரிற்கு பின்னரான சூழ்நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட சிகிச்சைபிரிவுகளை ஆரம்பித்தல் தொடர்பிலும் சுகாதார துறைசார் ஊழியர்களுக்கான திறன்விருத்தி பயிற்சிகள் வழங்குவது தொடர்பிலும் சிங்கப்பூர் அரசாங்கம் உதவி வழங்க வேண்டுமென வடக்கு சுகாதார அமைச்சர் வெளியுறவு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த வெளியுறவு அமைச் சர் அதற்கான திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து தங்கள் அரசாங்கம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளதாக உறுதியளித்தார்.

தொடர்ந்து யாழ்.மருத்துவ பீடத்திற்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் யாழ்.மருத்துவ பீடத்திற்கு 40 லட்சம் ரூபா அன்பளிப்பை வழங்கினார். இந்நிகழ்வில் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சருடன் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, வடமாகாண சுகாதார அமைச் சர் பா.சத்தியலிங்கம், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் விக்னேஸ்வரன் ஆகியோரும் மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விவகாரம், சமூக சேவை கள், புனர்வாழ்வு மற்றும் கூட் டுறவு அமைச்சர் அனந்தி சசி தரன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக யாழ். பேருந்து நிலையத்தில் மாலை வேளையில் தனியே நிற்கும் பெண்கள் மீது அப்பகுதியில் நிற்கும் சிலர் பாலியல் வக்கிரமான சொற்களால் அழைத்தல், பெண்களைப் பின் தொடர்ந்து செல்லல், தொலைபேசி இலக்கத்தைக் கேட்டு மிரட்டுதல் போன்ற அத்து மீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக மது போதையில் நடமாடும் யாசகர்கள் சிலர் பெண்களை மிகக் கேவலமான சொற்களால் தூஷிப்பதுடன், பாலியல் இம்சைகள்புரிவதாகவும்பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பெண்கள் மீதான இத்தகைய பாலியல்சார் அத்து மீறல்களில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துமாறு யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளேன். உடனடியாக இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுமொழி வழங்கியுள்ளார் என்று அனந்தி சசிதரன் தெரிவித்தார். (உ)

## தண்டனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொறுப்பதிகாரியாக இருந்து சித்திரவதை வழக்கில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப் பட்ட சிந்தக்க பண்டார என்பவர் மன்றில்தோன்றியவிதம்குறித்தே நீதிபதிகள் கண்டித்தனர்.

இச் சட்டவிதிமுறை மீறல் குறித்து அநுராதபுரச் சிறைச்சாலை அத்தியட்சகரை மன்றில் தோன்றி விளக்கமளிக்கவும் நீதிபதிகள் கட்டளை பிறப்பித்துள்ளனர்.

நேற்று 8 ஆவது நாளாகவும் யாழ்.நீதிமன்றக் கட்டத் தொகுதியின் 3 ஆவது மாடியில் அமைந்துள்ள பிரத்தியோக இடத்தில் இந்த மன்று கூடியது.

இவ்வழக்கில் சாட்சியமளிப்பதற்காக வழக்கின் 41 ஆவது சாட்சி முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிந்தக்க பண்டாரா அழைக்கப்பட்டார்.

மன்றில் அழைக்கப்பட்ட அவர் பொலிஸ் அதிகாரிகளைப் போன்று வெள்ளைநிற சேட், அரச கழுத்துப்பட்டி என்பவற்றை அணிந்துகொண்டுவந்திருந்தார்.

சாட்சியமளிக்கும் முன்னர் தன்னை மன்றில் அடையாளப்படுத்திக்கொண்டபோதுதான் முன்னாள் பொலிஸ் இன்ஸ் பெக்டர் என்பதைதெரிவித்துக்கொண்டார்.

இதனையடுத்து நீதிபதிகள் அவருடைய பெயரையும் மீண்டம் கேட்டுத் தெரிந்து கொண்டமையுடன், முன்னர் சுன்னாகப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினீரா எனக் கேள்வியும் எழுப்பினர்.

இதன்பின்னர் அவர் சித்திரவதை வழக்கில் குற்றவாளி தீர்ப்புக்கு உள்ளானவர் என்பதையும், தற்போது கிளிநொச்சி நீதிமன்றத்தில்நடைபெற்றுவரும்கொலை வழக்கின் சந்தேக நபர் என்பதையும் அறிந்து கொண்டனர்.

இவ்விடயம் குறித்து நீதிபதி மா.இளஞ்செழியன் குறிப்பிடுகையில், "கிளிநொச்சி நீதிமன்றத்தில் நடைபெறும் கொலை வழக்கின் சந்தேக நபர் நீர் – யாழ்.மேல் நீதிமன்றத்தினால் சித்திரவதை வழக்கில் குற்றவாளியாக தீர்பளிக்கப்பட்டு, 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதி – கிளிநொச்சி வழக்கில் பிணை விண்ணப்பம் யாழ்.நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

இவை அனைத்தையும் கையாண்ட நீதிபதி முன்னிலையிலேயே உம்மை குற்றவாளி சீருடை இல்லாமல் முற்படுத்தியுள்ளார்கள்." – என்றார்.

இதன் பின்னர் ஒன்று கூடி முடிவெடுத்த நீதிபதிகள் அநுராதபுர சிறைச்சாலை அத்தியட்சகரை இது தொடர்பாக விளக்கமளிப்பதற்காக மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்புக் கட்டளையைப் பிறப்பித்தனர்.

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு சீற்றத்துடன் கேள்வி எழுப்பினார் என அறிய வருகின்றது.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட அறிக்கையாளர் பென் எமர்ஸன், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளைச் சிறையில் பார்வையிட்டிருந்தார். அத்துடன் அவர்கள் சித்திரவதைகள் செய்யப்படுகின்றனர் எனவும் அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

## ஒதுங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலன்னறுவை மாவட்டம் தொடர்பில் தனது சொந்தாலோசனையின்றி கூட்டு எதிரணியின் தலைவர்கள் சிலர் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை அதிருப்தியுற்றே தாம் இந்த முடிவை எடுத்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார். (உ)

## வேலையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னால் போராட்டம்நடத்திவந்த வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று 143 ஆவது நாளில் தமது போராட்டத்தைத் தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்கிறார்கள் என அறிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்குமான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதில் கடந்தவாரம் 12 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டில் ஒருவருடபயிற்சிக்காலத்திற்கு உட்பட்டவாறுமாவட்ட அடிப்படையில்பட்டதாரிகள்வேலைக்குச் சேர்க்கப்பட வேண்டும் என்ற முடிவுஅறிவிக்கப்பட்டமைகுறித்து ஆராயப்பட்டது.

அதன்பின்னரேபோராட்டத்தைக் கைவிடும் முடிவு எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் யாழ். ஆளுநருக்குக் கடிதம்ஒன்றைஅனுப்பிவைத்து அதில் கூறப்பட்டவை வருமாறு:–

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பட்டதாரிகள் உள்ளீர்க்கப்படுவர் எனக் குறிப்பிட்டார்கள். மாவட்ட மட்டத்தில் ஒரு வருட பயிற்சிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இந்த வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த அரச நியமனங்களைத் துரிதமாக தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் வட மாகாணத்திற்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் வருகை தந்த போது எங்களின் கவனவீர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டிருந்தார்கள். நாம் உறுதியான தீர்வுகள் கிடைக்கப்பெறும் போது கைவிடுவோம் எனக் குறிப்பிட்டிருந்தோம். தற்போது 12.07.2017 அன்று பட்டதாரிக ளுக்கு அரச நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் எமது கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தற்காலிக மாக நிறுத்துகிறோம். எமது அரச நியமனம் தொடர்பான அரச வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடப்படாதுவிட்டால்எமதுகவனவீர்ப்புப் போராட்டம் மீண்டும் நடைபெறும் எனத்தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்களுக்குரிய நியமனங்களைத் துரித கதியில் பெற்றுக் கொள்வதற்கு தங்களாலான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நாம் இன்று தற்காலிகமாக கவனவீர்ப்புப் போராட்டத்தை நிறுத்துகின்ற போதும் பட்டதாரிகளின் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக வட மாகாண வேலையற்றபட்டதாரிகள்சமூகம்தொடர்ந்து செயற்படும்எனத்தெரிவித்துக்கொள்கின்றோம். – என்று உள்ளது.

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிப் பட்டியலில் தேர்தலில் போட்டியிட்ட விமல் வீரவன்ஸ உட்பட மூவர் அந்தக் கட்சியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தனர்.

அவர்களே நேற்று சபாநாயகர் கரு ஜயசூரியவைச் சந்தித்து அரசமைப்புப் பேரவையிலிருந்து தங்கள் கட்சி விலகியமை பற்றிய கடிதத்தை ஒப்படைத்தனர்.

விமல் வீரவன்ஸ, வீரகுமார திஸநாயக்க, ஜயந்த சமரவீர, உதயசாந்தகுணசேகர, நிரோஷன் பிரேமரட்ண ஆகியோரே அந்த ஐந்து எம்.பிக்களுமாவார்.

தங்களின் வெளியேற்றத்தின் மூலம் முழுமையான நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாகச் செயற்படுகின்றது என்றதாற்பரியம் இல்லாமல் போவதாக அவர்கள், சபாநாயகரிடம் சுட்டிக்காட்டினர்.

இப்போது, நாட்டுக்கு ஒரு புதிய அரசமைப்புத் தேவையில்லை என்றமகாநாயக்கரின்கருத்தைத் தாங்கள் ஏற்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அல்ல என சம்பந்தப்பட்ட மக்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். அதனால் அந்தக் காணி விடுவிப்புநிகழ்வு இடம்பெறவில்லை.

இந்தக் காணி விடுவிப்புக்காக நேற்றுக்கேப்பாபிலவுக்குவருகை தந்த அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை வழிமறித்த – கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த – மக்கள் தமது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தனர்.

அதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவியது. எனினும் போராட்டக்காரர்களுடன் பேசிய அமைச்சர் சுவாமிநாதன், பின்னர் இராணுவ முகாமுக்குள் சென்று இராணுவத்தினருடன் பேசிவிட்டுத் திரும்பினார். மீண்டும் மக்களுடன் பேசினார். காணி விடுவிப்பு நடவடிக்கையைமுன்னெடுக்காமலேயே அவர் திரும்பிச் சென்றார்.

நேற்று காணி விடுவிப்புக்காக அமைச்சர் அங்கு வந்த போது மக்கள் அவரிடம் பின்வருமாறு தெரிவித்தனர்.

"எங்கள் பூர்விக கிராமத்தை விடுவிக்குமாறு கோரி நாம் போராடி வருகிறோம். இப்போது விடுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள காணிகள் புலம் பெயர்ந்துவாழும் ஆறுபேருக்கு சொந்தமான–பலவருடகாலமாகக் காடாக – காணப்பட்ட பிரதேசம். இதை விடுவிக்கச் சொல்லி நாங்கள் யாரும் போராடவில்லை இவை விடுவிக்கப்பட வேண்டியவைதான். ஆனால் இது போராடி விடுவிக்க வேண்டிய காணியல்ல போராட்டத்துக்கு முன்னமே இது விடுவிக்க கூடியதாக இருந்தது.

''நாங்கள் எங்களுடைய பூர்வீகமாக வாழ்ந்த பயன்தரு மரங்கள், வருமானங்கள் நிறைந்த பகுதியை விடுவித்து தருமாறே 141 நாளாக போராடுகிறோம், இந்நிலையில் இந்த பராமரிப்பற்று காணப்படும் காடாக கிடந்த காணியை விடுவித்து, ஏமாற்றி கேப்பாபிலவு விடுவிக்கப்பட்டுவிட்டது என்ற பொய் பிரசாரத்தை மேற்கொள்ளவே இந்த நாடகத்தை அரசாங்கம் மேற்கொள்கிறது. – என்றனர்.

இந்தப் பின்புலத்தில் நேற்றுக் காணி விடுவிப்பு நிகழ்வுக்கென அங்கு வருகை தந்த அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் வழிமறித்தனர். தமது பிரச்சினைகளை விளக்கினர்.

அதையடுத்து அமைச்சர் இராணுவ முகாமுக்குள் சென்று முகாமின் அதிகாரிகளுடன் பேசினார். பின்னர் அவர் அந்த மக்களுடனும் மீளப் பேசினார்.

காணி விடுவிப்பு நிகழ்வை முன்னெடுக்காமலேயே அமைச்சர் திரும்பினார்.

அச்சமயம் அவர் ஊடகங்களுக்குப் பின்வருமாறு கருத்து வெளியிட்டார்.

"அடுத்த கட்டமாக இராணுவம் 14 கோடி 80 லட்சம் ரூபாவைக் கோருகின்றது. அதை எனது அமைச்சின் ஊடாக வழங்க ஏற்பாடு செய்துள்ளேன். அந்த ஏற்பாட்டின்படி காணிகளிலிருந்து வெளியேற அவர்கள் 6 மாத காலஅவகாசம்கோருகின்றனர்.

"நான் அந்தக் கால அவகாசத்தைஏற்றுக்கொள்ளவில்லை. அது நீண்ட காலமாகும். இந்த மக்கள் ஐந்து மாதங்களாகப் போராடுகின்றார்கள். மேலும் ஆறு மாதம் அவர்களைப் பொறுக்கும்படி கோர முடி யாது.

"ஆகவே இது குறித்து இராணுவத் தரப்பையும் பொது மக்களையும் அழைத்து எதிர்வரும் 26 ஆம் திகதி எனது கொழும்பு அமைச்சில் ஒரு நேரடிக் கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளேன். அங்கு பேசி உரிய முடிவை எடுப்போம்." – என்றார் அமைச்சர் சுவாமிநாதன்.

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கொமடோர் டி.ஜே.பி. தஸநாயக் காவை தொடர்ந்து எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட தஸநாயக்கா நேற்று மீண்டும் கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோதே அவரது விளக்கமறியலை நீடிக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (உ)

## வித்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நகர சபை விளையாட்டரங்கில் நடைபெற்ற 'போதைப்பொருள்களற்ற நாடு' தேசிய செயற்றிட்டத்தின் களுத்துறை மாவட்ட நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறுதெரிவித்துள்ளார்.

போதைப்பொருள்களற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய செயற்றிட்டத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் மேலதிக செயற்பாடுகள் எதிர்வரும் சில மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

போதைப்பொருட்கள்தொடர்பாக சமூகத்தில் காணப் படும் கசப்பான அனுபவங்களை எதிர்கால சந்ததியினருக்கு வழங்காது நாட்டையும், சமூகத்தையும்போதைப்பொருளின்பிடியிலிருந்து விடுவிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அர சாங்கம் என்ற வகையில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

"அச்சம் மிகுந்த – போதைப் பொருள்களுடன் தொடர்பான – பல குற்றச்செயல்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றன.

"இவ்வாறான அசாதாரண நிகழ்வுகளுக்கு இனிமேலும் இடமளிக்க முடியாது. போதைப் பொருள்களற்ற நாடு எனும் எண்ணக்கருவைவெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி அவ்வாறான ஒருநாட்டைக்கட்டியெழுப்புவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன்செயற்படவேண்டும்" – என்றும் வலியுறுத்தினார். (உ)

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கபளீகரம் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு கோட்டக்கேணி பிள்ளையார் கோவில் பகுதியில் இருந்து மணல் இறக்கம் என்ற பகுதிவரை மக்களின் மாநாவாரி விவசாய காணிகளை மகாவலி எல் வலய செயற்பாட்டாளர்கள் கடந்த இரண்டு நாள்களாக அளவீட்டுஎல்லைக்கல்நாட்டும்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார் கள்.

சம்பந்தப்பட்ட காணி அளவீடு தொடர்பில் காணி உரிமையாளர்கள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அவர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் இருந்து 1983ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். அதன் பின்னான கால கட்டங்களில் தமிழ் மக்களுக்கு சொந்தமான 2 ஆயிரத்து 524 ஏக்கர் காணிகள் வெலிஓயா பிரதேச பகுதியில் அபகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் மீண்டும் மக்களின் காணிகளை அபகரிக்கும்நோக்கில் அளவீட்டு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. கொக்குத் தொடுவாய் பகுதியில் 3 கிராம அலுவலகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றார்கள் இந்த மக்களின் நீர்ப்பாசனக் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் காணி அளவீடுகள் நிறுத்தப்பட வேண்டும் மக்களின் சொந்த காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் காணிகளை அபகரித்துத் தென்னிலங்கை மக் களுக்கு கொடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது." – என்று கொக்குத் தொடுவாய்பிரதேசத்தில்வைத்து து.ரவிகரன் ஊடகங் களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

# புதிய அரசமைப்புக்கான முதன்மை அறிக்கை ஜனவரியில்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 20

புதிய அரசமைப்புக்கான முதன்மை அறிக்கை எதிர் வரும் ஜனவரி மாதம் வெளி யிடப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

தேசிய கலந்துரையாடல், சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சால் நடத் தப்பட்ட 'இலங்கை மக்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது, புதிய அரச மைப்பு தொடர்பில் பிரதமர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

நாட்டில் போர் இடம் பெற்ற காலத்தில் புதிய அரசமைப்பு ஒன்றால் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சித்தோம். சமாதானம் இல்லாத காரணத் தால் அது சாத்தியப்படவில்லை. தற்போது ஒற்றுமையான ஒரு சூழல் உருவாகியுள்ளது. இவ் வாறான தருணத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக் கான பணிகளை மேற்கொள் கின்றோம். இதுவே எமக்கான சரியான தருணமாகும்.

மேலும், சமாதானமான இந்தப் பயணம் நீடித்தால் ஜனவரி மாதத்தில் புதிய அரசமைப்புக்கான முதன்மை அறிக்கையை நாடாளுமன்றத் தில் சமர்ப்பிக்க முடியும்.

அதுமட்டுமின்றி மேற்படி அரசமைப்பு நாட்டைப் பிளவு படுத்துவது அல்ல சிறுபான்மை அல்லது பெரும் பான்மை மக்களின் கருத்தை அறியவே இந்த முன்னெடுப்பை மேற் கொண்டுள்ளோம். -என் றார்.

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை - காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்** பிரதேசத்தில் மாசேரிபிரதே சத்திலும் வவுனியா பிரதே சத்தில் மலையாபருத்திக்குளம் ஆகிய இடங்களிலும் மின் சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரி வித்துள்ளார். (இ)

## புகையிலை உற்பத்திகளுக்கான தடை நேற்று முதல் நடைமுறைக்கு!

கொழும்பு, ஜூலை 20

புகையிலையைப் பயன்ப டுத்தி தயாரிக்கப்படும் புகை யற்ற புகையிலை உற்பத்திகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், நேற்றுமுதல் தடைசெய்யப்பட்டுள்ளன.

புகையற்ற புகையிலை பொருள்களின் உற்பத்தி, இறக் குமதி, விற்பனை அல்லது விற்பனைக்காகக் காட்சிப்ப டுத்தல் என்பன தடை செய் யப்பட்டுள்ளன என்று தேசிய புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகார சபையின் தலைவர் மருத்துவர் பாலித அபய கோன் தெரிவித்துள் ளார்.

புகையிலை மற்றும் மது பானம் தொடர்பான அதிகார சபையின் சட்டத்துக்கு அமை வாக இது தடைசெய் யப்பட் டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி மாவா, பாபுல், பீடி, ஹான்ஸ், பான்பராக் மற்றும் குட்கா போன்ற புகை யிலை உற்பத்திப் பொருள் களுடன், புகையிலையுடன் கூடிய வெற்றிலை உற்பத்தி மற்றும் விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளன.

அதனுடன் இனிப்புச்சுவை ஏற்படுத்தக் கூடிய அல்லது நிறம் ஏற்படுத்தக் கூடிய புகை யிலையுடன் கூடிய சிகரெட் உற்பத்தி, விற்பனை, இறக்கு மதி, காட்சிப்படுத்தல் என்பன வும் இந்த உத்த ரவுக்கு அமைய தடை செய்யப்பட்டுள்ளன.

## முட்டைக்குள் முட்டை!

### மாத்தளையில் அதிசயம்



மாத்தளையில் முட் டைக்குள் இருந்து இன் னுமொரு முட்டை கிடைத்த விசித்திர சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

மாத்தளை பிரதே சத்தைச் சேர்ந்த லொக் குகே சந்திரிக்கா என்ற பெண் கடை ஒன்றில் இந்த முட்டை யைக் கொள்வனவு செய்துள்ளார். முட்டையை வீட்டுக்குக் கொண்டு வந்து உடைத்துப் பார்த்த போது அதனுள் சிறியள விலான இன்னுமொரு முட்டை காணப்பட்டுள்ளது.

இந்த பெரிய முட்டையில் ஏனைய முட்டைகளை போன்று மஞ்சள் கரு, வெள்ளைக் கரு என்பன காணப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக சிறிய முழுமையான முட்டை ஒன்றும் காணப்பட்டது என சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

## வாகன விபத்து; ஒருவர் படுகாயம்

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பகுதியில் நேற் றுக் காலை வான் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன நேருக்கு நேர்மோதி விபத் துக்குள்ளானதில் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி, கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டதன் பின் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். வானின் சா ரதி கைது செய்யப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர். (எ)

## இலங்கையின் முதலாவது பள்ளிவாசலில் பெண்களுக்கான தொழுகை அறை திறப்பு



பேருவளையில் நேற்றுமுன்தினம் நிகழ்வு

இலங்கையின் முதலாவது பள்ளி வாசலான பேருவளை மஸ்ஜிதுல் அப்ராரில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பெண் களுக்கான தொழுகை அறை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் பிர தம அதிதியாகக் கலந்துகொண்ட நிகழ்வில், முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினரும், தேசிய ஊடக மையத்தின் தலைவரு மான இம்தியாஸ் பாக்கிர் மாக் கார், நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இலங்கைக் கான குவைத் மற்றும் பலஸ்தீன் தூதுவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பேருவளை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளி வாசல் கி.பி. 920 இல் நிர்மாணிக்கப்பட் டுள்ளது. அதேவேளை, அந்தப் பள்ளி வாசலைப்போன்று அடுத்துள்ள மைய வாடியும் வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்ததாக விளங்கு கின்றது. இதில் ஆதிகால அராபியர்கள் பலர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கஞ்சாவுடன் இருவர் கைது

மாளிகாவத்தை - மெல் வத்த பகுதியில் ஒரு கிலோ 50 கிராம் கோரள கஞ்சாவு டன் இருவர் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கிராண்ட்பாஸ் பிரதேசத் தைச் சேர்ந்தவர்களே இவ் வாறு கைது செய்யப்பட் டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## சைவப்புலவர் சங்க செயற்குழுக் கூட்டம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயற் குழுக் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது.

செயற் குழுக்கூட்டத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர், இளம் சைவப்புலவர் பரீட்சைப் பெறுபேறு வெளியிடல், பட்ட மளிப்பு விழா நடத்துதல், அமரத்துவமடைந்த சங்கத்தின் முன்னாள் செயலாளர் சைவப்புலவர் க.நித்தியத சீதரனின் பிள்ளைகளுக்கான கல்வி நிதி வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே, அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித் துள்ளார். (எ-54)

## கடற்படையின் பாதுகாப்புச் சேவையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கப்பல்கள்!



இலங்கைக் கடற் படையின் காலி மத்திய நிலையத்தி னூடாக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கப்பல்கள், போக்கு வரத்துக்கான பாதுகாப்பு சேவை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

2015 நவம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் இந்தச் சேவை யினூடாக அரசு 300 கோடி ரூபா வருமானம் பெற்றுள்ளது. கடற்படையினர் இதுபோன்ற மேலும் இரு சேவை நிலையங்களை கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய கடற் பிராந்தியங்களில் மேற் கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கடற்படையினரின் இந்த நடவடிக்கை சேவைகளில் கடல்வழி பாதுகாப்பு குழுக்கள், ஆயுதங்களைப் பெறுதல், களஞ்சியப்படுத் தல் மற்றும் விநியோகித்தல், வெடி பொருள்கள் மற்றும் வர்த்தக கப்பல் கம்பனிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட சாதனங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்குதல் போன்ற நடவடிக்கைகள் உள்ளடங்கும். இந்தச் சேவை நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் நிதி திறைசேரியில் வைப்பிலிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)



யாழ்ப்பாணம் வருகை தந்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் யாழ். பல்கலைக் கழகத்தில் பங்குகொண்ட நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம். ஆளுநரும் அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணனும் முதல் படத்தில். அண்மைக் காலத்தில் முரண்பட்டு நின்ற மாகாண அமைச்சர் சத்தியலிங்கம், முதலமைச்சருடன் நெருங்கி உரையாடுகின்றமை இரண்டாம் படத்தில். யாழ். பல்கலைக்கழக துணை வேந்தருடன் அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் மூன்றாம் படத்திலும்.

# தமிழரசுக்குத் தாவி விட்டேனா? இல்லை என்று டெனீஸ் மறுப்பு!

தான் தமிழரசுக்கட்சிக்கு தாவியுள்ளார் சில நபர்களால் திட்டமிட்ட வகையில் செய்தி பரப்பப்படுவதாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் ப.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் டெனீஸ்வரனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இப்படிச் செய்திகள் நீண்ட காலமாகவே பரப்பப்பட்டு வருகின்றன. அதுவும் முதலமைச்சருக்கு எதிரான பிரேரணையில் நான் ஒப்பமிட்ட பின்னர் அது தீவிரமடைந்துள்ளது.

உண்மையில் இன்று வரை நான் ரெலோ கட்சியில் இருப்பதால்தான் அக்கட்சியினர் என்னிடம் விளக்கம் கோரியும் இருக்கின்றார்கள். இன்று வரை – இந்த நிமிடம் வரை – ரெலோவில்தான் இருக்கின்றேன். கொள்கை ரீதியாக எந்தவொரு கட்சியும் ஜனநாயக விழுமியங்களை மீறிச் செயற்பட முடியாது. ஜனநாயக விழுமியங்கள் இன்னும் ரெலோவில் இருக்கின்றன என்றுதான் நான் நம்புகின்றேன்.

அவ்வாறான ஜனநாயக விழுமியங்களை மழுங்கடித்துவிட்டு – அவற்றை ஒழித்துவிட்டு – புறமுதுகில் குத்துவீர்கள் என்று சொன்னால், கட்சி தாவுவதோ, நடந்து செல்வதோ, ஓடிச் செல்வதோ ஒரு கட்சிக்குச் செல்வதோ தவறல்ல. முதுகுக்குப் பின்னால் குத்துகின்ற நபர் நானல்லன் – உங்களுடைய முகத்திற்கு நேராகவே சொல்லிவிட்டு எனக்கு என்ன தென்படுகின்றதோ – ஜனநாயகம் எங்கு நிலைத்திருக்கின்றதோ – அங்கு செல்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

சில நேரங்களில் சில மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை வரலாம். ஆனால் இன்று வரையில் ரெலோ கட்சியில் தான் இருக்கின்றேன். எதிர்காலத்தில் சரியாக, நீதியாக, நேர்மையாக அந்தக்கட்சி நடக்கவில்லை என்று சொன்னால் என்னுடைய நடவடிக்கையும் அதைப் பொறுத்து அமையும். – என்றார் அவர்.

# புகையிலை உற்பத்திக்குத் தடையா? இல்லை என இப்போது விளக்கம்!

புகையிலை, புகையிலைப் பொருள்களின் உற்பத்தி, இறக்குமதி, விற்பனை மற்றும் விற்பனைக்கான காட்சிப்படுத் தல் ஆகியன நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளன எனத் தேசிய புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகாரசபை அறிவித்தது.

இதனையடுத்து பாரம்பரியமாக புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்தவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. இது குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் நேற்று மேற்படி அதிகார சபை யின் தலைவர் கலாநிதி பாலித் அபேகோனுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

“மேற்படி தடை புகையிலைமற்றும் மதுபானம் தொடர்பான அதிகார சபையின் சட்டத்துக்கு அமைவாக அறிவிக்கப்பட்டுள்ளமை உண்மைதான். ஆனால் அது குறிப்பாக, மாவா, பாபுல், ஹான்ஸ், பான் பராக் மற்றும் குட்கா போன்ற புகையிலை உற்பத்திப் பொருள்கள் மற்றும் விற்பனைக்கான தடையாகும்.

புகையிலை உற்பத்தியை முற்றாகத் தடை செய்யும் எண்ணத்தில்தான் அரசு உள்ளது. ஆனால் இதுவரை அந்த உற்பத்தியில் ஈடுபட்டு வந்தவர்களை ஒரு நாளில் நாம் நிர்க்கதிக்கு உள்ளாக்க முடியாது. புகையிலைப் பாதிப்புக் குறித்து நாங்கள் அவர்களுக்குப் போதித்து விளக்குவோம். மாற்றுத் தொழில் முயற்சிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்போம். அவர்களைப் புகையிலை உற்பத்தியை கைவிடக் கூடிய வகையில் அவர்களுக்கு ஆதரவும் வழிகாட்டலும் வழங்குவோம்.

சில ஆண்டுகளில் படிப்படியாக அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ள இடமளிப்போம்.

“உலகில் அதிகூடிய வீதத்தில் வாய்ப்புற்று நோயாளர்கள் இலங்கையில்தான் உள்ளனர். அதற்குக் காரணம் புகையிலை மெல்லுதல்தான்.” – இப்படி கலாநிதி பாலித் அபேகோன் தம்மிடம் தெரிவித்தார் என சித்தார்த்தன் எம்.பி. குறிப்பிட்டார். (உ)

*(முன்னர் வந்த செய்தி 19ஆம் பக்கத்தில்)*


சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS



THE SASIKA DRIVING SCHOOL TSL

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

A/L பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு அரியதொரு சந்தர்ப்பம். நழுவ விடாதீர்கள்! இவ்விளம்பரத்துடன் கீழே இணைக்கப்பட்டுள்ள சிட்டையைச் பூர்த்தி செய்து வரும் மாணவர்களுக்கு விசேட கட்டணக் கழிவு வழங்கப்படும்!

இச்சலுகை
20.07.2017 – 01.08.2017 வரை மட்டுமே!
sasika Learners
sasika driving School@gmail.com.

தலைமைக் காரியாலயம்:
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE- 077 722 6247
021 2217678, 0776140361
021 221 7578

காலைக்கதிர் Kalaikkathir சசிகா லேணர்ஸ்
பெயர் ....................
முகவரி ....................
....................
தொ.பே.இல....................

கிளை நிறுவனங்கள்:
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
0703013012
கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்
021 224 3393
0703013014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
0703013016
281C. மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம் (ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்)
021 222 8004


# தமிழரான வயோதிப மாது கனடா விபத்தில் உயிரிழப்பு



கனடா, ரொரன்டோவில், உள்ள ஸ்காபுரோவில் நேற்று முன்தினம் காலை நடந்த விபத் தில் 71 வய தான சிவலோகநாதன் காமாட்சிப் பிள்ளை என்ற தமிழ் மாது உயிரிழந் தார். ஸ்காபுரோவில் Eglinton மற்றும் Midland சந்திப்புக்கு அருகாமையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் செவ்வாய்க் கிழமை காலை 11 மணி யளவில், ஆலயம் சென்று வீட்டிற்குத் திரும்பும் போது, வாகனம் மோதிப் பலியாகியுள்ளார்.

ரொரன்டோ போக்குவரத்துச் சபையின் (TTC) பேருந்தில் இருந்து இறங்கும் பொழுதில் கால் தவறி வீழ்ந்த நிலையில் பேருந்திற்குப் பின்னால் வந்த வாகனத்தால் மோதப்பட்டு இவர் மரணமடைந்துள்ளார் என ரொரன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த சிவலோகநாதன் காமாட்சிப்பிள்ளையை அவரது சகோதரர் அடையாளம் காட்டியுள்ளார். தனது சகோதரியின் பிரம்பை வைத்தே அவரை அடையாளம் கண்டுள்ளார்.

அவர் இந்தப் பகுதியில் ஏறத்தாழ 15 வருடங்களாக வாழ்ந்து வருகிறார் என அவரின் சகோதரர் தெரிவித்துள்ளார்.

பிரதி செவ்வாய்தோறும், அவர் அந்தப் பேருந்தின் ஊடாகவே ஆலயத்துக்கு சென்று வருபவர் என்றும், இவ்வாறான நிலையிலேயே நேற்றுமுன்தினம் இந்த துயரச் சம்பவத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் ரொரன்டோ பொலிஸார் தீவிர விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.